தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (தேபோஆ)

முகவரி

241, பூங்கா வீதி,
கொழும்பு 05

இணையத்தளம்

www.ntc.gov.lk

மின் அஞ்சல்

info@ntc.gov.lk

துரித அழைப்பு

1955

கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்,

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு,

7ஆவது மாடி,

செத்சிறிபாய கட்டம் 11

பத்தரமுல்லை.

ஆண்டறிக்கை – 2017

1971இன் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) பிரிவின் நியதிகளின் படியும் அரசாங்கத் தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்களின் அத்தியாயங்கள் 05 மற்றும் 06 இன் பிரகாரமும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31ஆந் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை, வருடாந்த கணக்குகள் அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை ஆகியவற்றை மிகவும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ஜனக்க மல்லிமாரச்சி,

தலைவர்,

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

உள்ளடக்கம்

அத்தியாயம்	பக்கம்
ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு	1
தலைவரின் செய்தி	3
மொத்தப் பகுப்பாய்வு	5
ஆணைக்குழுவின் அமைப்பு	6
2017 ஆம் ஆண்டின் செயலாற்றுகை	7
1. சமூக நலன்களை முதன்மைப் படுத்திய பேருந்துச் சேவைகளை வழங்குதல்	7
1.1 பாடசாலைப் பேருந்துச் சேவை வேலைத்திட்டம் ''சிசு செரிய''	7
1.2 கிராமிய பேருந்துச் சேவை வேலைத்திட்டம்- ''கெமி செரிய''	10
1.3 இரவுநேரப் பேருந்துச் சேவை வேலைத்திட்டம் - ''நிசி செரிய''	11
2. பேருந்து ஊழியர்களைப் பதிவுசெய்தலும் பயிற்சி அளித்தலும்	13
3. தனியார் பேருந்துச் சேவையினைப் புனரமைத்தல்	15
3.1 பேருந்துத் தரிப்பிடங்களை அமைத்தல்	15
4. நேர அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தியமைத்தல்	19
5. பேருந்துக் கட்டண முரண்பாடுகளை அகற்றுதல்	20
6. வீதிப் பாதுகாப்பு குறித்து விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள்	21
7. உள்ளகத் தகவல் தொழில்நுட்பத் தொகுதி	22
8. போக்குவரத்துக் கேள்வி மற்றும் சேவை தரத்தின் ஆய்வு	23
9. பொதுப் போக்குவரத்திற்கு GPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்	24
10. பேருந்துகளைப் பௌதிக ரீதியகப் பரிசோதித்தல்	25
11. மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குதல்	26
12. மக்கள் முறைப்பாடுகள்	27
13. நடமாடும் பரிசோதனை மற்றும் விசாரணை	29
14. தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை	29
வருடாந்த கணக்குகள்	33
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	53

ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு

2017 ஜனவரி முதல் 2017 திசெம்பர் வரை

1. பொறி.திரு. எம்.ஏ.பி. ஹேமச்சந்திர - தலைவர்
2. பேராசிரியர் ஜே.எம்.எஸ்.ஜே. பண்டார - உறுப்பினர்
3. திரு. ஆனந்த விஜயரத்ன - உறுப்பினர்(பதவி வழி)
4. திரு. ஏ.எம்.ஆர்.ஜே.கே. ஜயசிங்க - உறுப்பினர்(பதவி வழி)
5. திரு. ஏ.எம்.அசங்க தயாரத்ன - உறுப்பினர்(பதவி வழி)
6. விரிவுரையாளர் திமந்த டி சில்வா -உறுப்பினர்
7. பட்டயப் பொறி. எஸ்.பி.டப்ளியு. ஜயசிறிவர்தன - உறுப்பினர்
8. சட்டத்தரணி தனுஷ்க வெலிகம - உறுப்பினர்

சபைக் கூட்டம் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள்

2017ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை 16 ஆகும்.

2017ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களின் எண்ணிக்கை 06 ஆகும்.

சட்டத் திருத்தங்கள்

2017ஆம் ஆண்டில் 1991/37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தில் கீழ்வரும் திருத்தங்கள் மேற்கொள்ள்பட்டன.

1. 2017 இல 6 கொண்டதேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்திய சட்டம்)

இச்சட்டத்தின் மூலம்1991/37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டத்தின் 40ஆவது உறுப்புரையில் ‘‘பத்தாயிரம் ரூபாவை விடக் கூடிடாத’’ என்பதற்குப் பதிலாக ‘‘இரண்டு இலட்சம் ரூபாவை விடக் கூடிடாத’’ என்பதனை பதிலீடு செய்து அவ்வுறுப்புரை திருத்தப்பட்டுள்ளது.

தலைவரின் செய்தி



நாட்டின் அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றும் செயற்பாட்டினுள் போக்குவரத்திற்கு பாரிய வகிபங்கொன்று சாட்டப்பட்டுள்ளது. ஏந்நாட்டிலாயினும் போக்குவரத்து வலையமைப்பின் வினைத்திறன், பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாடு குறித்து பெரிதும் செல்வாக்குச் செலுத்தும். ஆதன்படி, இலங்கையில் பொதுப் பேருந்து பயணிகள் போக்குவரத்துத் தொகுதியினை முறையாக, தரமிக்கதாக மற்றும் வினைத்திறன் மிக்கதாக ஆக்குவதற்கு தேவையான நியதிச்சட்ட செயற்பாடுகளை தொகுத்து, நாட்டின் போக்குவரத்துத் தேவைகளை முறைப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளைத் திட்டமிடுவதைப் பொறுப்பாகக் கொண்டுள்ளது.

1991 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை மக்களுக்கு வினைத்திறன்மிக்க மற்றும் சௌகரியமிக்க சேவையினை முறையாக வழங்கும் நன்னோக்கில் 2017ஆம் ஆண்டில் பல்வேறு செயற்றிட்டங்கள் பலவற்றைச் செயற்படுத்தியுள்ளது.

விசேடமாக,சமூக நலனை நோக்காகக் கொண்டு பேருந்துச் சேவைகளாகச் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்களின் கீழ் பாடசாலை மாணவர்கள் உள மற்றும் உடல் ரீதியான கஷ்டங்களின்றி நேரகாலத்துடன் பாடசாலைக்கு செல்லும் மற்றும் பாதுகாப்பாக வீடு திரும்பும் வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்குடன் 'சிசு செரிய' பேருந்துச் சேவையினைத் தொடர்ந்தும் மேற்கொள்ளுதல்,போக்குவரத்து வசதிகளற்ற பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு தமது நாளாந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வசதியினை வழங்கும் நோக்கில் 'கெமி செரிய' பேருந்துச் சேவை செயற்றிட்டத்தினைச் செயற்படுத்துதல், இரவு வேளைகளில் மற்றும் அதிகாலையில் பேருந்துச் சேவைகளில் காணப்பட்ட பற்றாக்குறையினால் பயணிகள் முகங்கொடுத்த அசௌகரியங்களை இல்லாதொழிக்க 'நிசி செரிய' செயற்றிட்டத்தினைச் செயற்படுத்துதல் முக்கிய இடம் வகிக்கின்றன.

இதற்கு மேலதிகமாக, தனியார் போக்குவரதது ஊடகங்களைப் பயன்படுத்தும் மக்களைப் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் பால் ஈர்ப்பதற்கும் பொதுப் பயணிகள் போக்குவரத்துத் துறையின் தரத்தினை விருத்தி செய்வதற்கும், நாட்டில் பல்வேறு சனநெருக்கடியான பிரதேசங்களில் நவீன வசதிகளைக் கொண்ட பேருந்துத் தரிப்பிடங்களை அமைக்கும் செயற்றிட்டமும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றது. அதன் படி, 2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வவுனியா நகரத்தில் கட்டியெழுப்பப்பட்ட நவீன வசதிகளுடன் கூடிய பேருந்துத் தரிப்பிடம் 2017 ஜனவரி மாதம் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, மெதகம மற்றும் கிண்ணியா ஆகிய பிரதேசங்களில் 2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட புதிய பேருந்து நிலைய நிர்மாணப் பணிகளும் 2017.12.31ஆகையில் முடிவடைந்து மக்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், பொதுப் பயணிகளான மக்களுக்கு நம்பகமான, பாதுகாப்புமிகு, வசதிமிக்க பொதுப் போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்குவதன் மூலம் பொதுப் பேருந்து பயணிகள் போக்குவரத்துச் சேவையின் தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் எல்லா பேருந்து ஓட்டுனர்களுக்கும் சம சந்தர்ப்பத்தினை வழங்கும் விதத்தில் விஞ்ஞான ரீதியான ஒன்றிணைந்த சுழல்முறை நேர அட்டவணையைத் தயாரிக்கும் வேலைத்திட்டமும் தொடர்ந்தும் செயற்படுத்தப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக, 2017ஆம் ஆண்டில் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்காக வீதிப் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ்பேருந்து உரிமையாளர்கள், ஓட்டுனர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோரை அறிவுறுத்தும் செயலமர்வுகள் பல நடாத்தப்பட்டன.

மேலும், பொதுப் போக்குவரத்திற்காக புவியியல் நிலைமையினை அடிப்படையாகக் கொண்ட GPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வாகனங்களைக் கண்காணிப்பதன் மூலம் உடனடியாகப் பேருந்துகளை முறைப்படுத்தவும் பயணிகள் முறைப்பாட்டினை விசாரணை செய்தல் மற்றும் தகவல்கள் வழங்குதல் ஆகியவற்றிற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, போக்குவரத்து தொடர்பில் திட்டமிடுகையில்,மற்ற எத்துறையிலும் விடத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிப்பது அவசியமாகும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் போக்குவரத்துத் துறைக்குரிய அரச நிறுவனங்கள் பலவற்றிலிருந்துதரவுகளை ஒன்றுசேர்த்து பரந்த விடய பரப்பொன்று உள்ளடங்கும் விதத்தில் தேசிய போக்கவரத்து புள்ளிவிபர அறிக்கையினை வெளியிடுதலும் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வெல்லா செயற்றிட்டங்களின் மூலமும் பொதுப் போக்குவரத்துத் துறையின் தரத்தினை விருத்தி செய்தல், பாதுகாப்பு மற்றும் வினைத்திறன் மிக்க போக்குவரத்து சேவையொன்றினை வழங்குதல் என்பன நோக்காகக் கொள்ளப்படுகின்றன. நாளுக்கு நாள் அதிகரித்துவரும் வீதி நெருக்கடியினைக் குறைக்கும் நோக்கில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் பால் ஈர்ப்பதற்கு பொதுப் பயணிகள் சேவைக்குரிய அடித்தள வசதிகளை அபிவிருத்தி செய்தல் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற் குறிப்பிட்ட துறைகளுடாக இலங்கைப் பொதுப் பயணிகள் போக்குவரத்து பேருந்துச் சேவையினை உயர் தரமிக்க, பாதுகாப்புமிக்க மேலும் வசதிமிக்க சேவையொன்றாகப் பேணுவதற்கு எடுக்கும் முயற்சியில் அதற்காகத் துணை புரியும் அனைத்து வெளித் தரப்பினருக்கும், கௌரவ போக்குவரத்து அமைச்சர் உட்பட அமைச்சின் எல்லா அதிகாரிகளுக்கும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை மற்றும் அனைத்து பணிக்குழாத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜனக்க மல்லிமாரச்சி
துலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

மொத்தப் பகுப்பாய்வு

எமது நோக்கு

நாட்டினுள் சமூக-பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக தரமிக்க, ஆகுசெலவு விளைபயன்மிக்க மற்றும் பாதுகாப்புமிக்க ஒன்றிணைக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டமைப்பு மற்றும் சேவை ஆகியவற்றின் மூலம் இலங்கையின் எல்லா குடிமக்களினதும் பல்வேறுபட்ட போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்தலை உறுதிப்படுத்துதல்.

எமது பணி

பயணிகள் போக்குவரத்து தொடர்பான தேசிய கொள்கைக் குறித்து இலங்கை அரசிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் திறன்மிகு பஸ் போக்குவரத்து முறைமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஒழுங்குபடுத்தற் சட்டகத்தை உருவாக்குதல்

எமது இலக்குகளும் /குறிக்கோள்களும்

- பேருந்துச் சேவையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை தரம் மிக்கதாகவும் போதிய அளவானதாகவும் உயர் மட்டத்தில் தொடர்ந்தும் பேணுதல்.
- வினைத்திறன்மிக்க போக்குவரத்து முறைமை ஒன்றினை அபிவிருத்தி செய்தல்
- தங்களுக்கு மிகவும் பொருத்தமான பேருந்துச் சேவையைத் தெரிவு செய்வதற்கு உதவும் விதத்தில் போக்குவரத்து முறைமை ஒன்றை அபிவிருத்தி செய்தல்
- பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்களின் உறுதிப்பாடு மற்றும் நிலைப்பாட்டினை உறுதி செய்தல்
- கிராமப்புற மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பிரதேசங்களில் செயற்படுத்தப்படும்குறைந்த வருமானம் ஈட்டும் ஆனால் சமூக ரீதியில் அவசியமான பேருந்துச் சேவைகளுக்கு நிதி உதவி அளித்தல்
- பயணிகள் போக்குவரத்துப் பேருந்துச் சேவைகள் மூலம் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பைத் தடுப்பதற்கான ஒரு வழிமுறையினைத் திட்டமிட்டு அதனை அபிவிருத்தி செய்தல்
- பேருந்து இயங்கும் நேரத்தை ஒழுங்கமைப்பதன் மூலம் பேருந்துகளின் விளைபயனை அதிகரித்தல்
- பேருந்துகளை இயக்கும் வேளையில் பாதுகாப்பையும் ஒழுங்கையும் உறுதி செய்தல்
- மாகாணங்களுக்கிடையில் மற்றும் மாகாணச் சேவையில் ஈடுபடும் பேருந்து சேவைகளின் போக்குவரத்து முறைமைகளை ஒருங்கிணைத்தல்
- நாட்டின் மொத்த உழைப்புத் திறனை மேம்படுத்துதல்

ஆணைக்குழுவின் அமைப்பு

ஆணைக்குழு மூன்று பதவிவழி அங்கத்தவர்களையும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் போக்குவரத்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மேலும் ஐந்து அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது. ஆணைக்குழு ஒழுங்குசார் கட்டமைப்பு தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் திட்டமிடல், இயக்கம் மற்றும் சேவைகள் கண்காணிப்பு, தர உறுதிப்பாடு, வெளியார் தொடர்பு, நிதி மற்றும் கொள்வனவு ஆகிய 4 திணைக்களங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படும் பணிப்பாளர்கள் நால்வரையும் கொண்டது.

2017ஆம் ஆண்டின் இறுதியில் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 204 ஆக இருந்ததுடன், சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தரப் பணியாளர்களின் எண்ணிக்கை 193 ஆகும்.

2017.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஊழியர் எண்ணிக்கை

தொடரிலக்கம்	புதவிப் பெயர்	**பணியாளர் தொகுதி**	**அங்கீகரிக்கப்பட்ட பணியணி**	**சேவையில் ஈடுபட்டிருந்த பதவியணியினர்**
01	பணிப்பாளர் நாயகம்	HM 2- 1	01	01
02	பணிப்பாளர்	HM 1-1	04	03
03	உதவிப் பணிப்பாளர்	MM 1-1	17	13
04	கனிஷ்ட முகாமையாளர்	JM 1-1	21	21
05	முகாமைத்துவ உதவியாளர்	MA 4	36	33
06	முகாமைத்துவ உதவியாளர்	MA 2-1	2	1
07	முகாமைத்துவ உதவியாளர்	MA 1-1	76	74
08	சாரதி	PL 3	13	16
09	அலுவலக உதவியாளர்	PL 1	12	12
10	நேரக் காப்பாளர்	PL 1	18	16
11	தொழிலாளர்	PL 1	3	3
	மொத்தம்		**204**	**193**

மூலம் - கட்டுப்பாட்டுத் திணைக்களம், தேபோஆ

2017ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை

1. சமூக நலனை முதன்மைப்படுத்தும் பேருந்துச சேவையினை வழங்குதல்

இலங்கை வாழ் பெரும்பான்மையான மக்களின் போக்குவரத்துத் தேவைகள் பொதுப் பயணிகள் போக்குவரத்துப் பேருந்துகளின் மூலமாகவே நிறைவேற்றப்படுகின்றன. அதனால் உரிய சேவையினை முறையாக வழங்கும் நோக்கில் 2018ஆம் ஆண்டிலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவற்றுள் சமூக நலநன நோக்ககாகக் கொண்டு பேருந்துச் சேவையாகச் செயற்படும் 'சிசு செரிய' மற்றும் 'நிசி செரிய' ஆகிய செயற்றிட்டங்கள் உட்பட ஒட்டுமொத்த பேருந்துப் பயணிகள் போக்குவரத்துத் துறையின் மேம்பாட்டிற்காகச் செயற்படுத்தப்படும் செயற்றிட்டங்கள் பலவுள்ளன.

பாடசாலை மாணவச் சமூகத்திற்காகவே ஒதுக்கப்பட்ட, உடல்,உள ரீதியாக எவ்வித இடைஞ்சலுமின்றி நேரத்துக்கு பாடசாலைக்கு செல்லும்மற்றம் பாதுகாப்பாக வீடு திரும்பக்கூடிய வசதியினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்காகக் கொண்டு'சிசு செரிய' பேருந்துச் சேவை செயற்றிட்டமும், போக்குவரத்து வசதிகளற்ற பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு தமது நாளாந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு வசதியினை வழங்கும் நோக்கில் 'கெமி செரிய' பேருந்துச் சேவை செயற்றிட்டமும், இரவு வேளைகளில் மற்றும் அதிகாலையில் பேருந்துச் சேவைகளில் காணப்பட்ட பற்றாக்குறையினால் பயணிகள் முகங்கொடுத்த அசௌகரியங்களை இல்லாதொழிக்க 'நிசி செரிய' செயற்றிட்டமும் செயற்படுத்தப்படுகின்றன.

1.1 பாடசாலைப் பேருந்துச் சேவை செயற்றிட்டம் 'சிசு செரிய'





'சிசு செரிய' பேருந்துச் சேவை'

இலங்கையில் அநேகமான பிரசித்தி பெற்ற பாடசாலைகள் நகரத்தை அண்மித்ததாக அமையப் பெற்றுள்ளமையால், வருடாவருடம் கிராமப்புறப் பாடசாலைகளில் இருந்து நகர பிரசித்தமிக்க பாடசாலைகளுக்கு நகரும் மாணவச் சமூகம் படிப்படியாக அதிகரித்து வரும் போக்கு காரணமாக பிரதான பாதைகளில் சேரும் வேன் வண்டிகளின் அளவும் படிப்படியாக அதிகரிக்கின்றது. இதன் காரணமாக காலை வேளையிலும் பகல் வேளையிலும் நகரத்தை அண்டிய பகுதியில் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடியினால் அதற்குள் அகப்பட்டுக் கொள்ளும் பாசாலை மாணவர்கள் மற்றும் அப்பாதைகளைப் பயன்படுத்தும் ஏனைய பொது மக்களும் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்கின்றனர். இவ்வாறு மோட்டார் வண்டிகள் மற்றும் சிறிய, பெரிய வேன் வண்டி அதிக எண்ணிக்கையில் பிரதான வீதிகளில் சேர்வதனால் நகரத்தை அண்டிய பாதைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்ட காலத்தின் தேவையான, முக்கியமான வழிமுறையாக பாடசாலை மாணவர்களுக்காகவே ஒதுக்கப்பட்ட பேருந்துச் சேவையான ‘‘சிசு செரிய’’ பாடசாலை பேருந்துச் செயற்றிட்டத்தினைக் குறிப்பிடலாம்.

மேலும், இச்செயற்றிட்டத்தின் கீழ், பாடசாலை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ள நலன்கள்அச்சிறார்களின் பெற்றோரும் பெரும் மன ஆறுதலைப் பெற்றுக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. நேரத்துக்கு பாடசாலைக்கு சென்றுகளைப்பின்றி கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பாதுகாப்பாக வீடு திரும்பக்கூடிய வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதே இச்செயற்றிட்டத்தின் நோக்காகும். சிறுவர் துஷ்பிரயோகத்தினைக் குறைத்துக் கொள்ளல், பெற்றோர்களுக்கு சலுகைக் கட்டண முறையொன்றினைப் பெற்றுக் கொடுத்தல் மூலம் நம்பிக்கைமிகு மற்றும் முறையான சமூக சேவையொன்றினை நிறைவேற்றுதல் இச்செயற்றிட்டத்தின் ஏனைய நோக்கங்களாகும்.

இதன்போது ‘‘சிசு செரிய’’ செயற்றிட்டத்தின் கீழ் குறைந்த பட்சம் 42 ஆசனங்களைக் கொண்ட பேருந்துகளை ஈடுபடுத்துவது காட்டாயமாவதுடன், சாதாரண பேருந்துகட்டணத்தின் 50% வீதம்மாணவர்களிடமிருந்து அறவிடப்படுவதுடன், இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான மற்றும் தனியார் துறையினருக்குச் சொந்தமான பேருந்துகள் மூலம் சேவைகள் பெற்றுக் கொள்ளப்படும். பேருந்து இயக்குனர்களின் இழக்கும் வருமானத்தின் பொருட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஏற்கனவெ இணங்கப்பட்ட கட்டண அளவின் படி பின்னர் மீள்நிரப்பி சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.தற்போது ‘சிசு செரிய’ செயற்றிட்டத்தின் கீழ் ஈடுபடுத்தப்பட்டுள்ள 1370 பேருந்துகளின் காரணமாக (15 ஆசனங்கள் அளவிலான) ஏறக்குறைய 6000 பாடசாலை வேன் வண்டிகள் நகரத்திற்குள் வருவது தவிர்க்கப்பட்டுள்ளதுடன், 80,000இற்கும் அதிக எண்ணிக்கையிலான பாடசாலைச் சிறார்கள் சேவையினைப் பெற்றுக் கொள்கின்றனர்.

2017.12.31ஆந் திகதியாகையில் செயற்படுத்தப்படும் சிசு செரிய சேவைகளின் எண்ணிக்கைகீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

மாகாணம்	சிசு செரிய பேருந்துச் சேவைகளின் எண்ணிக்கை
மேல்	424
வடமேல்	272
வடமத்திய	147
தென்	121
சப்பிரகமுவா	126
ஊவா	82
கிழக்கு	109
மத்திய	48
வட	32
மாகாணங்களுக்கு இடையில்	09
மொத்தம்	1370

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ

அதிகஆசனங்களைக் கொண்ட பேருந்துகளை ஈடுபடுத்துவதன் மூலம் சிறிய தனியார் வாகனங்களின் எண்ணிக்கையினைக் குறைப்பதும் எரிபொருள் பாவனையைக் குறைப்பதும் வாகனங்களில் இருந்து வெளியேறும் புகையினால் ஏற்படும் சூழல் மாசுறலைக் குறைப்பதும் செயற்படுத்தப்படுகின்றன.

2017ஆம் ஆண்டு இறுதியாகையில் சிசு செரிய சேவைகளின் எண்ணிக்கை 1370 வரை வளர்ச்சி அடைந்துள்ளதுடன், அச்சேவைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றனவா என அடிக்கடி பரிசீலனை செய்யப்படுகின்றது. ஆதன் படி ஒப்பந்த நிபந்தனைகளை மீறுதல், அறிவிக்காமல் சேவையிலிருந்து விலகுதல் ஆகிய காரணங்களால் 19 பேருந்துச் சேவைகள் 2017ஆம் ஆண்டினுள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

2017 ஆம் ஆண்டினுள் சிசு செரிய சேவை வழங்கல் தொடர்பில் செலவிடப்பட்ட தொகை 441.61 மில்லியன் ரூபா ஆகும்.

1.2 கிராமியபேருந்துச் சேவைச் செயற்றிட்டம் -''கெமி செரிய''



''கெமி செரிய'' கிராமிய பேருந்துச் சேவை

விசேடமாக போக்குவரத்து வசதிகளற்ற, நகரத்தை விட்டும் தூரத்தில் உள்ள, கிராமப்புறத்தில் வாழும் மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்காக 2005ஆம் ஆண்டில் 'கெமி செரிய' செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போதாகையில் போக்கவுரத்து வசதிகளற்ற அன்றாட தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கேனும் முடியாத பின்னணியில் அதன் அவசியத்தினை இனங்கண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 'கெமி செரிய' செயற்றிட்டத்தினை ஆரம்பித்துள்ளது. இப்பேருந்துச் சேவை ஏனைய பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் செயற்படுத்தப்படாத பாதைகளுக்காக மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஆரம்பத்தில் இருந்து 03 வருடங்கள் வரை பேருந்து இயக்குனர்களுக்கு உதவித்தொகை ஒன்று செலுத்தப்படும். ஆரம்பத்தில் இருந்து இது வரை அவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய 'கெமி செரிய் சேவைகளின் எண்ணிக்கை 52 ஆகும். இது வரையில் உதவித் தொகையினைப் பெறும் சேவைகளின் எண்ணிக்கை 06 ஆவதுடன், புதிய 06 சேவைகளினை ஆரம்பிப்பதற்கு 2017ஆம் ஆண்டு இறதியாகையில் திட்டமிடப்பட்டுள்ளது. செயற்றிட்டத்திற்கு தனியார் துறையின் ஓட்டுனர்கள் மாத்திரம் ஈடுபடுத்தப்படுவதுடன், திறந்த கேள்வி கோரல் முறைமையின் கீழ் ஓட்டுனர்கள் தெரிவு செய்யப்படுவர்.

2017.12.31ஆந் திகதியில்செயற்படுத்தப்படும் கெமிசெரிய சேவைகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

மாகாணம்	கெமி செரிய பேருந்துகளின் எண்ணிக்கை
மத்திய	02
கிழக்கு	02
வடமேல்	02
மொத்தம்	**06**

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ

2017 ஆம் ஆண்டினுள் கெமி செரிய சேவை வழங்கல் தொடர்பில் செலவிடப்பட்ட தொகை 2.45 மில்லியன் ரூபா ஆகும்.

1.3 இரவு நேர பேருந்து சேவை செயற்றிட்டம் - ''நிசி செரிய''

இரவு வேளைகளில் மற்றும் அத்காலை வேளைகளில் பேருந்துச் சேவைகள் தொடர்ச்சியாக செயற்படாத, இலங்கையின் பல பிரதேசங்களில் உள்ள பொது மக்களுக்கு தொழில் மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக நேரகாலத்துடன் உரிய இடங்களுக்கு செல்ல முடியாமையினால் பெரும் அவஸ்தைக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. பிரதான பாதைகள் தவிர்ந்த பல உட்பாதைகளில் ஏற்பட்டுள்ள இக்கவலைக்கிடமான நிலைமையினைப் புரிந்து கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதற்றுத் தீர்வாக 'நிசி செரிய' செயற்றிட்டத்தினை ஆரம்பித்தது.

ஆதிகாலை மற்றம் இரவுப் பயணமுறைகளின் போது பேருந்துகளின் இயக்கத்தின் மூலம் போதியளவு வருமானமொன்று கிடைக்காமலிருப்பினும் போக்குவரத்துச் சேவை கிடைக்காமை காரணத்தால் பயணிக்கும் மக்கள் முகங் கொடுக்கும் கடும் நெருக்கடிகளைக் குறைத்தல் இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.



''நிசி செரிய'' இரவு நேரப் பேருந்துச் சேவை

'நிசி செரிய'செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கானது இரவு 8.00 மணிக்கு பிறகு கடைசி பயணமுறை மற்றும் மறுநாள் அதிகாலையில் முதல் பயணமுறைக்காகப் பொதுப் பேருந்துச் சேவையினை ஈடுபடுத்தி பயணிகளின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தலாகும். போக்குவரத்துச் சிக்கல்கள் உள்ள பிரதேசங்களில் பயணிக்கும் மக்களுக்கு இச்சேவைக் கிடைக்கின்றமை பெரும் ஆறுதலாக இருப்பதுடன், நம்பிக்கைமிகு சேவையொன்றினை நிலைநிறுத்துவதற்காகவும் கண்காணிப்பு நடவடிக்கைகளை எளிதாக்குவதற்காகவும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குரிய பேருந்துகள் மாத்திரம் ஈடுபடுத்தப்படுகின்றன. 2017.12.31ஆந் திகதியாகையில் செயற்பாட்டிலுள்ள 'நிசி செரிய' சேவைகளின் எண்ணிக்கை கீழ்வருமாறு.

மாகாணம்	நிசி செரிய பேருந்துச் சேவைகளின் எண்ணிக்கை
மேல்	54
தென்	16
வடமேல்	14
வடமத்திய	11
மத்திய	20
சப்பிரகமுவா	03
ஊவா	09
கிழக்கு	03
மொத்தம்	**130**

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ

தற்போது நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் 'நிசி செரிய' பேருந்துச் சேவை செயற்படுத்தப்படுவதுடன் பலரின் பாராட்டுதல்களுக்கு உள்ளாகும் காலத்தின் தேவையான சமூக சேவையாக உள்ளது. ஏதிர்வரும் காலத்தில் இச்சேவையினை மென்மேலும் விஸ்தரிப்பதற்கு ஏற்கனவே தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அலுவலர்களால் இலங்கைப் போக்குவரத்துச சபையின் அலுவலர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படுகின்றது. பேற்றுக் கொடுக்கும் சேவையின் தரத்தினைப் பாதுகாப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நடமாடும் பரிசோதனை அதிகாரிகளை ஈடுபடுத்தப்பட்டு, அடிக்கடி

அப்பேருந்துச் சேவைகளைப் பரிசோதனை செய்யப்பட்டு கடும் அர்ப்பணிப்புடன் செயற்படுத்தப்படுகின்றது.

2017ஆம் ஆண்டின் போது 'நிசி செரிய' பேருந்துச சேவைக்காக செலவிடப்பட்ட தொகை 6.58 மி. ரூபாவாகும்.

2. பேருந்து ஊழியர் குழுவினரை பதிவுசெய்தலும் பயிற்சி அளித்தலும்

மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகளில் பணியில் ஈடுபட்டிருக்கும் சாரதிகளையும் நடத்துனர்களையும் பதிவு செய்வதற்கு மேலதிகமாக அவர்களது பணியினை தொழில்வாண்மை மிக்கதாக ஆக்குதல் மற்றும் சிறந்த ஒழுக்கமிகு தொழில்வாண்மையாளர்களாக சமூகத்தினுள் சேர்த்தல் மூலம் பயணிக்கும் மக்களில் அவர்கள் தொடர்பில் நல்ல மனப்பாங்கினை ஏற்படுத்தல் என்பனவற்றை நோக்காகக் கொண்டு விசேட பயிற்சி நிகழ்ச்சிகள் இதன் கீழ் செயற்படுத்தப்படுகின்றன.பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளின் நம்பிக்கை மற்றும் மதிப்பினைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சிகரமான சேவையொன்றினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் 2006ஆம் ஆண்டு முதல் இப்பயிற்சி நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. மேலும்,இப்பயிற்சி நிகழ்ச்சிகள் நாட்டில் உள்ள போதனாசிரியர்களால் மேற்கொள்ளப்படுவதுடன், பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்பவர்களுக்கு விசேட சாரதி.˙. நடத்துனர் அடையாள அட்டை ஒன்றை வழங்குவதும் இச்செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்ட வருடம் முதல் இது வரை இருபத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.
இதற்கு மேலதிகமாக, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் ரூலம் இரண்டு வருடங்களுக்கு மேல் அனுபவங் கொண்டுள்ள பேருந்துச் சாரதிகளுக்கு ˙பயணிகள் சேவை சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் (யளளநபெநச வுசயளெிழசவ வுசயளைபெ) என்பதன் கீழ் விசேட பயிற்சி நிகழ்ச்சி ஒன்று 2017 யூலை மாதம் முதல் செயற்படுத்தப்படுகின்றது.

எனினும்,இவ்வாறு பயிற்சி பெற்று இத்துறையினுள் பிரவேசிக்கும் அனைவரும் உரிய தொழில் தங்கியிராமையாலும் பேருந்து உரிமையாளர்களின் தமது விருப்பப்படி தகுதிப் பரீட்சையோ அல்லது வேறு ஏதேனும் நியமங்கள் இன்றி சாரதிகளையும் நடத்துனர்களையும் சேவையில் ஈடுபடுத்துவதாலும் எதிர்பார்க்கப்படும் தரத்தினைக் காண்பது பெரும் சவாலாகக் காணப்படுகின்றது.




பயிற்சி நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றிய பேருந்து ஊழியர்களின் ஒரு பிரிவினர்

2017 ஆம் ஆண்டினுள் பயிற்சி நிகழ்ச்சிகளில் மாதாந்தம் ஈடுபடுத்தப்பட்ட சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் எண்ணிக்கை கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

மாதம்	முதன்முதலாக		புதுப்பிப்பதற்காக		நிபந்தனைகளை மீறியமையால் பயிற்சி பெறல்		பொதுப் போக்குவரத்து / PT பயிற்சி பெற்ற சாரதிகள்
	சாரதிகள்	நடத்துனர்கள்	சாரதிகள்	நடத்துனர்கள்	சாரதிகள்	நடத்துனர்கள்	
ஜனவரி	72	21	16	31	8	11	-
பெப்ரவரி	-	90	33	49			-
மார்ச்	90	38	44	43	24	33	-
ஏப்பிரல்	-	38	40	35			-
மே	83	-	81	80	25	26	-
ஜூன்	85	73	46	42			-
ஜூலை	-	40	89	65			37
ஆகஸ்ட்	81	39	42	35	35	37	50
செப்தெம்பர்	-	33	141	115			-
ஒக்தோபர்	81	34	92	61	35	38	46
நவம்பர்	76	-	46	41			-
திசெம்பர்	35	51	9	11	30	33	-
மொத்தம்	**603**	**457**	**679**	**608**	**157**	**178**	**133**

மூலம்- தரப்பாதுகாப்புத் திணைக்களம், தேபோஆ



மூலம்- தரப்பாதுகாப்புத் திணைக்களம், தேபோஆ

2017ஆம் ஆண்டு இறுதியாகையில் 603 சாரதிகளுக்கும் 457 புது நடத்துனர்களுக்கும் என 1060 பேருக்கு பயிற்சி அளித்து அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக முதுன் முதலாகப் பயிற்சி பெற்ற சாரதிகளுக்கும் நடத்துனர்களுக்கும் இலவசமாக சீருடைகளும் வழங்கப்பட்டன.

2017 ஆம் ஆண்டில் 2820 சாரதிகள்/ நடத்துனரகள் 44 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

2017 திசெம்பர் 31ஆந் திகதியில் செயற்றிட்டத்திற்கான திரண்ட செலவு 5.21 மி.ரூபா ஆகும்.

3. தனியார் பேருந்துச் சேவைகளை மீளமைத்தல்

3.1 பேருந்துத் தரிப்பிடங்களை அமைத்தல்

பொதுப் போக்குவரத்துச் சேவையின் துறைசார் பங்களிப்பு படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளமையும் தனியார் போக்குவரத்து ஊடகங்களின் துறைசார் பங்களிப்பு அதற்கு நேர்மாறாக அதிகரித்துச் சென்றுள்ளமையும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தொகுக்கப்பட்டுள்ள 'தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை' 2016 மற்றும் 2017இன் தரவுகளை ஒப்பிடும் போது தெளிவாகின்றது. ஆவ்வறிக்கைகளின் படி 2016ஆம் ஆண்டாகையில் 50.9% ஆக இருந்த பொதுப் போக்குவரத்துச் சேவையின் துறைசார பங்களிப்பு 2017ஆம் ஆண்டாகையில் 42.7% வரை குறைவடைந்துள்ளது. மோட்டார் வண்டிகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஆகிய தனியார் போக்குவரத்து ஊடகங்களின் துறைசார பங்களிப்பு 46.4% முதல் 54.8% வரை அதிகரித்துள்ளது. பொதுப் போக்குவரத்துச் சேவையினைப் பயன்படுத்துவதில் இலங்கை மக்களின் ஆர்வம் படிப்படியாக குறைவடைவது இதன் மூலம் தெளிவாகின்றது. எனினும், உலகின் புதிய

அபிவிருத்தி உபாயமுறைகளின் பிரகாரம் இயற்கைச் சூழலில் ஏற்படும் பாதிப்பினைக் குறைப்பதற்கு கொள்கைகளைத் திட்டமிடலும் அமுல்படுத்துவதும் கட்டாயமாகும். அதாவது போக்குவரத்து ஊடகங்களின் மூலம் சூழல் மாசடைதலைக் குறைப்பதெனின் பெருந்தெருக்களில் ஏற்படும் வாகன நெரிசலைக் குறைத்தல் வேண்டும். ஆதற்கான மிக முக்கியமான மாற்றீடாக பெரும்பான்மையான மக்களை பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் பால் ஈர்த்துக்கொள்ள வேண்டியுள்ளது. இச்சவாலினை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவே கொண்டுள்ளது. ஆதனால்,அச்சவாலினை வென்றெடுப்பதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் அதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அதன் படி, சமூகத்தில் ஒவ்வொரு மட்டத்திற்கும் பொருத்தமாகும் விதத்தில் நவீன வசதிகளைக் கொண்ட மனங்கவர் சுற்றுகூழலைக் கொண்ட அவ்வப் பிரதேசங்களுக்கு பொருந்தக் கூடிய விதத்தில் பேருந்துத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய புதிய பயணிகள் பேருந்துத் தரிப்பிடத் தொகுதிகள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நிர்மாணித்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

3.1.1 கிண்ணியாபேருந்துத் தரிப்பிடத்தை அமைத்தல்

கிழக்கு மாகாணத்தில் கிண்ணியா நகரசபைக்கு உரிய 225 சதுர மீற்றர் பரப்பளவு கொண்ட நிலத்தில் பேருந்துத் தரிப்பிடத்தினை அமைக்கும் பணிகள் 2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கை பொறியியற் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட திட்டத்தின் படி மற்றும் அதன் முழுமையான மேற்பார்வையின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள இப்பேருந்துத் தரிப்பிடம், 2017ஆம் ஆண்டு இறுதியாகையில் அனைத்து பணிகளும் முடிவடைந்துள்ளதுடன் 2018ஆம் ஆண்டில் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.



மக்களிடம் கையளிக்கப்படவுள்ள கிண்ணியா புதிய பேருந்துத் தரிப்பிடம்

நாட்டின் கிழக்குக் கரையோரத்தை அண்டியதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இக்கட்டடத் தொகுதி கண்கவர் அழகிய சுற்றுச் சூழலைக் கொண்டதாக மலசலகூட வசதிகளும் அங்கவீனர்களுக்கு

அவசியமான வசதிகளும் கொண்டதாக உள்ளது.இதற்கு மேலதிகமாக ஒரே முறையில் 4 பேருந்துகளை நிறுத்தி வைப்பதற்கான இடவசதியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

செயற்றிட்டத்திற்காக 2017.12.31ஆந் திகதியில் திரண்ட செலவு 6.09 மில்லியன் ரூபாவாகும்.

3.1.2. மெதிரிகிரிய பேருந்துத் தரிப்பிடத்தை அமைத்தல்



மக்களிடம் கையளிக்கப்படவுள்ள மெதிரிகிரிய புதிய பேருந்துத் தரிப்பிடம்

பிராந்திய ரீதியாக போக்குவரத்துத் துறையின் எல்லைகளை விஸ்தரித்தவாறு மெதிரிகிரிய நகரத்தை அண்டி மிகவும் சுந்தரமான சூழலில் 103 பர்ச்சஸ் காணியில் நிர்மாணிக்கப்பட்ட மெதிரிகிரிய புதிய பேருந்துத் தரிப்பிடம் 240 சதுர மீற்றர் பரப்பைக் கொண்டதுடன் ஒரே நேரத்தில் 6 பேருந்துகளை நிறுத்தி வைப்பதற்கான வசதிகளைக் கொண்டுள்ளது. இப்பேருந்துத் தரிப்பிடம் பயணிக்கும் மக்களுக்கு மற்றும் ஓட்டுனர்களுக்கு தேவையான சுகாதார வசதிகள், அங்கவீனர்களுக்கு தேவையான வசதிகள் மற்றும் ஏனைய அம்சங்களுடன் பிரதேசவாசிகளுக்கு மற்றும் வருகைத்தரும் பயணிகளுக்கு பாரிய சேவையினை வழங்கும் விதத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.



மெதிரிகிரிய புதிய பேருந்துத் தரிப்பிடத்தில் பயணிகளுக்கான வசதிகள்

2017.12.31.ஆந் திகதியாகையில் பெயர்ப் பலகைகளைப் பொருத்துதல் தவிர்ந்த மீதமுள்ள எல்லா பணிகளும் முடிவடைந்துள்ளதுடன் அப்பணிகளும் முடிவுற்றதுடன் 2018ஆம் ஆண்டில் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

3.1.3. மெதிரிகிரிய பேருந்துத் தரிப்பிடத்தை அமைத்தல்

ஊவா மாகாணத்தில் மொணறாகலை மாவட்டத்திற்குரிய மெதகம பிரதேசம் போதியளவு போக்குவரத்து வசதிகளற்ற கஷ்டப் பிரதேசமாகும். பயணிகளுக்குகாத்து நிற்பதற்கோ மற்றும் பேருந்துகளை நிறுத்தி வைப்பதற்கோ முறையான வழிமுறையொன்றற்ற பின்னணியில் தேசிய போக்கவரத்து ஆணைக்குழுவினால் மெதகம பிரதேசத்தில் பிபில- மொணறாகலை பேருந்துப் பாதையினை அண்டியதாக அனைத்து அம்சங்களும் கொண்ட பேருந்துத் தரிப்பிடம் ஒன்று கட்டப்பட்டது.



மெதகம பேருந்துத் தரிப்பிடம்

முதல் கட்டமாக கட்டுமானப் பணிகள் 2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 82 பரிச்சஸ் காணியில் 225 சதுர மீற்றர் பரப்பளவைக் கொண்டதாக அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தினால் நிர்மாணிக்ப்பட்ட திட்டத்தின் படி, அதன் முழுமையான மேற்பார்வையின் கீழ் பேருந்துத் தரிப்பிடம் நிர்மாணிக்கப்பட்டது. இப்பேருந்துத் தரிப்பிடம் பயணிக்கும் மக்களுக்கு மற்றும் ஓட்டுனர்களுக்கு தேவையான சுகாதார வசதிகள், அங்கவீனர்களுக்கு தேவையான வசதிகளுடன் சிறப்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டு இறுதியாகையில் எல்லா பணிகளும் முடிவடைந்துள்ளதுடன் 2018ஆம் ஆண்டில் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

2017.12.31ஆந் திகதியில் இதற்காக மேற்கொள்ளப்பட்ட திரண்ட செலவு 8.99 மில்லியன் ரூபாவாகும்.

4. நேர அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தி அமைத்தல்

நாடு முழுதும் மாகாணங்களுக்கு இடையில் பொதுப் பயணிகள் போக்குவரத்துப் பேருந்துச் சேவையினை வழங்கும் எல்லா பேருந்து ஓட்டுனர்களுக்கும் சம சந்தர்ப்பத்தினை வழங்கும் விதத்தில் பயண நேர அட்டவணைகளைத் தயாரித்தலும் அரச மற்றும் தனியார் பிரிவின் பேருந்து ஓட்டுனர்களுக்கு இடையிலான பாதகமான போட்டித் தன்மையினைக் குறைத்தலும் அதன் மூலம் ஓட்டுனர்களின் வியாபார நிலைப்பாட்டினைப் பாதுகாப்பதும் பயணிக்கும் மக்களுக்கு நம்பகமானதும் பாதுகாப்பானதுமான உயர் தரமிக்க பொதுப் பேருந்துச் சேவையினை வழங்குவதும் இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கங்களாகும். இதற்கு மேலதிகமாக, பேருந்து ஒன்று சாதாரணமாக ஒரு நாளைக்கு ஓடும் கிலோ மீற்றர் அளவினைஉச்சப்படுத்துதல் இச்செயற்றிட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களில் முக்கியமானதாகும். மேலும், தேசிய ஒழுங்கமைப்பு நிறுவனமொன்றாக நிறைவேற்ற வேண்டிய பிரதான பணிகளாக இவற்றைக் குறிப்பிடலாம்.

இபோச மற்றும் தனியார் பேருந்துகளுக்கான ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைத் தயாரிப்பதற்கான இலங்கைப் போக்குவரத்துச் சபையிடமிருந்து கிடைக்கும் பங்கு குறைதல், ஒன்றிணைந்த நேர அட்டவணைகளைச் செயற்படுத்துவதற்கு பொது பேருந்துத் தரிப்பிட வசதிகள் இல்லாமை என்பன இச்செயற்றிட்டம் வெற்றிபெறுவது குறைவடைவதற்கு ஏதுவாகின்றன. அதனால் இபோச ஒன்றிணைந்த நேர அட்டவணைகளின் படி பேருந்துகள் பயணிப்பதற்கு இணங்கும் வரையில் தனியார் பேருந்துகளுக்காக மாத்திரம் சுழல்முறை நேர அட்டவணைகளைத் தயாரிப்பதற்கு தேசிய போக்குவரத்துச் சபை தீர்மானித்துள்ளது.

2017 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் மாகாணங்களுக்கு இடையிலான 240 பேருந்துப் பயணப் பாதைகளில் மற்றும் 1784 பேருந்துகளில் சுழல்முறை நேர அட்டவணை தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது.

2017.12.31 ஆந் திகதி வரையில் இதற்காக மேற்கொள்ளப்படட் செலவு 0.2 மி. ரூபா ஆகும்.

5. பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குதல்

2002 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பேருந்துக் கட்டணக் கொள்கையின் சிபாரிசுக்கமைய பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

பேருந்துப் பயணிகள் பயணிக்கும் தூரத்திற்கு ஒப்பாக கட்டணமொன்றை அறவிடும் நோக்கில் மற்றும் கட்டண சந்தர்ப்பங்களை குறிப்பிட்ட நியமங்களின் கீழ் நிறுவும் நோக்குடன் பேருந்துக் கட்டணக் கொள்கை மூலம் கட்டணச் சந்தர்ப்பமொன்றிற்கான சாதாரண தூர அளவு பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, தட்டையான தரை பாதையில் கட்டணச் சந்தர்ப்பமொன்றிற்கான சாதாரண தூரம் 2 கி.மீ. ஆகவும் மலைநாட்டுப் பாதையில் கட்டண சந்தர்ப்பமொன்றிற்கான சாதாரண தூரம் 1.7 கி.மீ. ஆகவும் நாட்டின் எல்லா பேருந்து பயணவழிகளும் அளவிடப்பட்டு கட்டணச் சந்தர்ப்பங்களை நிறுவுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அப்பரிந்துரையினைச் செயற்படுத்தும் நோக்கில் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2015ஆம் ஆண்டு இறுதியாகையில், மகாணங்களுக்கு இடையிலான 400 பாதைகளும், மேல் மாகாணத்தில் 780 பாதைகளும் மத்திய மாகாணத்தில் 783 பாதைகளும் தென் மாகாணத்தில் 388 பாதைகளும் வடமேல் மாகாணத்தில் 366 பாதைகளும் சப்பிரகமுவா மாகாணத்தில் 574 பாதைகளும் ஊவா மாகாணத்தில் 480 பாதைகளும் அளவிடப்பட்டு தரப்படுத்தப்பட்ட கட்டணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆதன் பிரகாரம், அளவீட்டின் படி கட்டணங்களைத் திருத்தியமைக்கையில் இபோச மற்றும் மாகாணப் போக்குவரத்து அதிகாரசபையின் இணக்கம் கிடைக்காமையால் அமுல்படுத்தவதற்கு முடியாது போயிற்று.

2017 திசெம்பர் 31ஆந் திகதியில் 1.32 மி. ரூபா தொகை செலவு இச்செயற்றிட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6. வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்

உலகில் வீதி விபத்துக்களால் வருடத்திற்கு 1.24 மில்லியன் அளவிலான மக்கள் இறப்பதாக வீதி விபத்துக்கள் தொடர்பிலான தரவு அறிக்கைகள் உறுதிப்படுத்துகின்றன. இது நாளொன்றிற்கு ஏறக்குறைய 3400ஆ குவதுடன், இலங்கையிலும் நாளொன்றிற்கு 6 அல்லது 7 பேர் என மனித வளத்தினை நாடு இழக்க நேரிட்டுள்ளது. ஏவ்வாறெனினும் இறத்தல் மற்றும் பெரும்பாலானோர் முழுமையாக அல்லது பகுதி நிலையில் அங்கவீன நிலைமைக்குத் தள்ளப்படுகின்றமை மிகவும் பாரதுரமான நிலைமையாகும்.



வீதிப் பாதுகாப்பு குறித்து செயலமர்வில் கலந்துகொண்டோர்



வீதிப்பாதுகாப்பு குறித்து செயலமர்வொன்றின் ஒரு சந்தர்ப்பம்

வீதிகளில் ஏற்படும் விபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகரித்தல், சாரதிகளின் கவனயீனமான வாகன ஓட்டுகை மற்றும் வீதியினைப் பயன்படுத்துகையில் பாதசாரிகளின் பதற்றமான நடத்தை ஆகிய இரண்டுமே ஏதுவாக இருக்கின்றமையால், வீதி விபத்துக்களால் இழக்க நேரிடும் உயிர்கள் மற்றும் சொத்துக்களின் பெறுமதி தொடர்பில் இரு தரப்பினரும் உரிய முறையில் அறிவுறுத்தப்பட்டு மனப்பாங்கினை விருத்தி செய்தல் வேண்டும். ஆதனால் நாட்டின் எதிர்காலத்தினை பொறுக்கேற்கவுள்ள இளஞ் சந்ததியினருக்காக அப்பாரதுரமான பொறுப்பினை ஏற்றுக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, அவர்களது மனப்பாங்கினை விருத்தி செய்து, அறிவு மற்றும் விளக்கமிக்க பிரிவினராக சமூகமயப்படுத்துவதற்காக இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆதன் மூலம், முதலில் இம்மாணவச் சமூகத்தினை பதற்றமான கட்டுப்பாடற்ற நிலையிலிருந்து மீட்டு சுயபுத்தியுடன், பாதுகாப்பாக வீதியினைப் பயன்படுத்துவதற்குப் பயிற்றுவித்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

விசேடமாக, பாடசாலைகளில் போக்குவரத்தினை ஒழுங்கமைக்கும் பாடசாலை சிறார்களுக்காக விசேட நிகழ்ச்சித்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டு அவர்களுக்கு வீதிப் பாதுகாப்பு குறித்து விபரமான

அறிவினைப் பெற்றுக் கொடுத்து அப்பிள்ளைகளினூடாக பாடசாலையின் ஏனைய பிள்ளைகளையும் அறிவுறுத்துவது எதிர்பார்க்கப்படுகின்றது.

2017ஆம் ஆண்டில் வீதிப் பாதுகாப்பு குறித்து 07 செயலமர்வுகள் கொழும்பு, ஹங்வெல்லை, எம்பிலிபிட்டி, கண்டி, காலி, திவுலப்பிட்டி, சிலாபம் ஆகிய பிரதேசங்களில் நடாத்தப்பட்டதுடன், அதற்கு இணைவாக விஜய பத்திரிகைக் கம்பனியின் அனுசரணையின் கீழ் பாடசாலைச் சிறார்களுக்கிடையில் சித்திரப் போட்டியொன்று நடாத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. 150 பாடசாலைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் விதத்தில் ஏறக்குறைய 3750 மாணவர்கள் இப்பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர்.

2017ஆம் ஆண்டின் போது இதற்காக செலவிடப்பட்ட தொகை 1.65 மி. ரூபாவாகும்.

7. உள்ளகத் தகவல்கள் தொழில்நுட்பத் தொகுதி

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பிரதான மற்றும் உப அலுவலகக் கணினி வலையமைப்பை சிறந்த மட்டத்தில் பேணுதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன், நிறுவனத்தினுள் நடைபெறும் எல்லா செயற்பாடுகளையும் இனங்கண்டு அச்செயற்பாடுகள் ஒன்றையொன்று இணையுமாறு மையப்படுத்தப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்ட தொகுதியொன்றினை அமைக்கும் நோக்கில் நிறுவனத்தின் அனைத்து செயற்பாட்டினையும் தானியங்கச் செய்யும் தொகுதியொன்றினை நிறுவுதல் (Process Automation System) என்பன ஏற்கனவே ICTA நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அறுவுத்தல்களின் கீழ் அரம்பிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே,தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வலைத்தளத்தில் காணப்படும் தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் புதிய தகவல்களை உட்புகுத்துதலையும் தேடுதலையும் எளிதாக்கும் முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேருந்துக் கட்டணம் குறித்து தரவுகள், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து நேர அட்டவணைகள், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளின் இயங்கும் பாதைகளின் வரைபடங்கள், பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம் தொடர்பில் கேள்விமனு குறித்து தகவல்கள் உட்பட்டவற்றை வலைத்தளத்தினூடாக எளிதாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் வலைத்தளத்தை மேலும் முன்னேற்றுதல் என்பனபுதிய அணுகுமுறைகளுடன் புது விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெஸ்ரியன் மாவத்தை பேருந்துத் தரிப்பிடத் தொகுதியில் மற்றும் மேலும் 6 பிரதான பேருந்துத் தரிப்பிடங்களில் பொருத்தப்பட்டுள்ள இலத்திரனியல் தகவல் பலகைகளை (Digital Display Boards – LED Panels)இற்றைப்படுத்தி மற்றும் உரிய முறையில் செயற்படும் நிலைக்கு கொண்டு வந்து அதனை ஊடக நிறுவனமொன்றினால் பராமரிக்கப்பட்டு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து பேணுதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெஸ்ரியன் மாவத்தை உப அலுவலக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள CCTV கெமரா தொகுதி உரிய முறையில் செயற்படாமையினால் அதற்கான புதிய தொழில்நுட்பத்தினைக் கொண்ட CCTV கெமரா தொகுதியொன்று குறிப்பிட்ட பேருந்துத் தரிப்பிடம் உள்ளடங்கலாக மற்றும் வவுனியா பேருந்துத் தரிப்பிடமும் உள்ளடங்குவதாகப் பொருத்துவதற்கு தேவையான கொள்வனவு முறைமைகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கு மேலதிகமாக, பயணிக்கும் மக்களுக்கு தரமிக்க போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்கும் நோக்கில் இணையத்தளத்தினூடாக (இடையறா) ஆசனங்களை முன்பதிவுசெய்தல் செயற்றிட்டமொன்று (Online Bus Ticket Reservation System) மொறட்டுவைப் பல்கலைக்கழத்தின் மூலம் உரிய மென்பொருள் விருத்தி செய்யப்பட்டு ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

செயற்றிட்டத்திற்காக 2017.12.31ஆந் திகதியில் திரண்ட செலவு 4.2 மி.ரூபாவாகும்.

8. போக்குவரத்துக் கேள்வி மற்றும் சேவை தர ஆய்வு

இதன் கீழ்,பிரதானமாக மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து இயக்கத்திற்கு மற்றும் ஏனைய பேருந்துச் சேவை செயற்றிட்டங்களை விஸ்தரிப்பதற்கு உரிய பயணிகள் கேள்வி ஆய்வு மேற்கொள்ளப்படும். அதன் மூலம் வழங்கப்படும் சரியான தரவுகள் முறையான அட்டவணைகளைத் தயாரிப்பதற்கும் எழும் பிரச்சினைகளைத் குறைத்துக் கொள்வதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும்.இதற்கு மேலதிகமாக மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்து தொடர்பில் முக்கியமான தீர்மானங்களை எடுக்கும் போது, கொள்கைகளைத் தயாரிக்கும் போது, திட்டங்களைத் தீட்டும் போது காணப்படும் நிலைமையினை ஆராய்தல் முதலில் நடைபெறும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்படும் சிசுசெரிய, கெமி செரிய மற்றும் நிசி செரிய செயற்றிட்டங்கள் குறித்து தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களின் போதும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். ஆதன் படி பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்துவோர் மற்றும் பேருந்து ஓட்டுனர்கள் ஆகிய இரு தரப்பினர்களுக்கும் நியாயமான முறையில் கேள்வி மற்றும் நிரம்பலை மிகச் சிறப்பாகக் கையாள்வதற்கு தேவையான வழிமுறைகளை மேற்கொள்வதற்கும் உரிய தரவுகள் முக்கிய காரணியாக அமைந்துள்ளது.

2017ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில்,தெற்கு அதிவேகப் பாதையில் மற்றும் வெளிப்புற சுற்றுப் பாதையில் செய்த ஆய்வு விசேடமாவதுடன், அதிவேகப் பாதையினூடாகப் பயணிக்கும் அதி சொகுசு பேருந்துச் சேவையினை பயணிகளின் கேள்விக்கேற்ப வழங்குவதற்கும் வழிகோலியது.இதற்கு மேலதிகாக கண்டி – கொழும்பு, காலி – கொழும்பு ஆகிய பிரதான பாதைகளில் செயற்படுத்தப்படும் பேருந்துச் சேவைகள் தொடர்பில் கூடிய கவனஞ் செலுத்தி 2017ஆம்

ஆண்டினுள் இப்பிரிவினால் 25 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற்காகச் செலவிடப்பட்ட மொத்த தொகை 0.94 மில்லியன் ரூபாவாகும்.

9. பொதுப் போக்குவரத்திற்காக ஜீ.பீ.எஸ். (GPS) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்

பொதுப் போக்குவரத்துச் சேவையில் எழும் சவால்மிக்க பிரச்சினைகளைத் தீர்ப்பதனை அடிப்படையாகக் கொண்டு தரமிக்க மற்றும் பாதுகாப்புமிக்க பொதுப் போக்குவரத்துச் சேவையொன்றினை நிலைநிறுத்துவதற்காக தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தும் வகையில் ஜீ.பீ.எஸ். தொழில்நுட்பம் (GPS Technology) மற்றும் ஏனைய தொழில்நுட்ப நுணுக்கங்களைப் பிரயோகித்து மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளை நெறிப்படுத்துதல் முதன்முதலாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டது.



ஜீ.பீ.எஸ். நெறியாள்கை

இச்செயற்றிட்டத்தின் கீழ், 2017ஆம் ஆண்டினுள் ஜீ.பீ.எஸ். ஊபகரணங்கள் செயலிழந்து காணப்பட்ட பேருந்துகளை மீண்டும் செயற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு உரிய முறைமைகள் மீள் ஒழுங்கமைக்கப்பட்டது. அதன் படி,எல்லா பேருந்துகளிலும் ஜீ.பீ.எஸ். ஊபகரணங்களைப் பொருத்துதல் மற்றும் செயலிழந்த உபகரணங்களை மீண்டும் செயற்படும் நிலைமைக்கு கொண்டு வரல் உரிய பேருந்து உரிமையாளரின் பொறுப்பு என அனுமதிப்பத்திர நிபந்தனைகள் அமுலாக்கப்பட்டடுள்ளன.

இதற்கு இணைவாக 2017ஆம் ஆண்டினுள் எல்லா அதிவேகப் பாதைகளிலும் இயங்கும் பேருந்துகளில் ஜீ.பீ.எஸ். உபகரணங்களைப் பொருத்துதல் துரிதமாக மேற்கொள்ளப்பட்டதுடன், அது முழுதாக முடிவடைந்துள்ளது. மேலும்,மாகாணங்களுக்கு இடையிலான சொகுசு சேவைகளுக்கும் ஜீ.ப.எஸ். தோழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், அச்சேவைகளிலும் முழுமையாக ஜீ.பீ.எஸ். உபகரணங்களைப் பொருத்துதல் முடிவடைந்துள்ளது. ஆவ்வாறே உரிய பேருந்து நெறியாள்கைக்குத்

தேவையான புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய நெறியாள்கைக் கூடமொன்று நிறுவப்பட்டதுடன் நெறிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் நெறியாள்கைக் கூடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வுபகரணத் தொகுதி பயணிக்கும் பேருந்துகளில் வேகத்தினைக் கட்டுப்படுத்தி எச்சரிக்கை சமிக்ஞை ஒன்று பேருந்தினுள் ஒலிப்பதுடன் அதற்கு இணைவாக காட்டுப்பாட்டு அறையில் அது தொடர்பில் குறிக்கப்படுவதாலும் இது வரையில் ஜீ.பி.எஸ். தொழில்நுட்பம் பொருத்தப்பட்டுள்ள பல பேருந்துகள் கூடிய வேகத்துடன் செல்வதைக் கட்டுப்படுத்தியுள்ளன. இதற்கு மேலதிகமாக பொது மக்கள் முறைப்பாடுகள் அலகுடன் இணைக்கப்பட்டுள்ள துரித தொலைபேசி அழைப்புப் பிரிவிற்கு கிடைக்கும் முறைப்பாடுகளை உடனடியாகத் தீர்ப்பதற்கும் அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் முடியுமாயுள்ளது.

மேலும்,ஜீ.பீ.எஸ். உபகரணங்கள் பொருத்தப்பட்ட பேருந்துகளின் இயக்க நிலைமைகள் குறித்து தகவல்கள் ஓட்டுனர்களுக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகளுக்கும் அறிவுட்டும் நோக்கில் குறுஞ்செய்தி சேவையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேருந்துகள் இயங்கும் இடங்கள் குறித்து தகவல்களை பயணிக்கும் மக்களுக்கு அறிவுறுத்துவதற்கு 1955 துரித அழைப்பு அரகொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக 2017ஆம் ஆண்டினுள் 2.81 மி. ரூபா திரண்ட செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10. பேருந்துகளைப் பௌதிக ரீதியில் பரிசீலித்தல்

ஒரு பயண முறையில் சாதாரணமாக மாகாணங்களுக்கு இடையிலான தூரப்பயணச் சேவை பேருந்தொன்று பல மணி நேரம் ஓடவேண்டியுள்ளமையால் அதில் ஈடுபடுத்தப்படும் பேருந்துகள் பயணிகளுக்கு உடல் மற்றும் உள ரீதியான அசௌகரியங்களின்றி இருத்தல் வேண்டும். எனவே தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அப்பேருந்துகளின் தகுதி குறித்து கூடிய கவனஞ் செலுத்துகின்றது. இதற்கு மேலதிகமாக,பயணிகளின் பாதுகாப்பையும் சௌகரியத்தையும் உறுதிப்படுத்தும் நோக்கில், அனுமதிப்பத்திரமொன்றினை வழங்குவதற்கு முதல் பேருந்துகளில் ஒவ்வொரு சேவை வகைக்கு ஏற்ற விதத்தில் இருக்க வேண்டிய விடயங்கள் குறித்து முழுமையான பரிசீலினை செய்யப்படும். அதன் படி,பேருந்துகளின் உள்ளே மற்றும் வெளியே ஒலி மட்டம் (noise level), மிதிபலகை, கதவுகள், அவசரக் கதவுகள் என்பன உரிய முறையில் செயற்படுகின்றனவா எனவும்,ஆசனங்களின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆசனங்களுக்கு இடையிலான இடைவெளிஎன்பன உரிய நிபந்தனைகளுக்கு இணங்க இருக்கின்றனவா எனவும், மணித் தொகுதி, பிரதான விளக்கு, சமிக்ஞை விளக்குகள்என்பன உரிய முறையில் செயற்படுகின்றனவா எனவும் பேருந்தில் எல்லா பௌதிக நிலைமைகளையும் பரிசீலித்து அறிக்கை வழங்கப்படும். பயணிகள் போக்குவரத்திற்காக ஈடுபடுத்த முன்வைக்கப்படும் எல்லா பேருந்துகளுக்கும் இவ்வறிக்கையினைப் பெற்று முன்வைப்பது கட்டாயமாகும்.

அதன் படி,மாகாணங்களுக்கு இடையிலான புதிய பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் வழங்கும் போது மற்றும் பயணிப்பதிலிருந்து அகற்றப்பட்ட பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளைப் பதிலீடு செய்யும் போது, இவ்வறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு, உரிய வழங்கல் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.


11. மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குதல்

இலங்கையில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் பாரிய பொறுப்பொன்றினை நிறைவேற்றி,பேருந்துப்பயணிகள் போக்குவரத்துச் சேவை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நெறிப்படுத்தப்படுவதுடன்,மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துச் சேவைகளை சிறந்த மட்டத்தில் மேற்கொள்வதற்கு வேண்டிய ஒழுங்குவிதிகளை தயாரிப்பதும் பயணிகள் போக்குரவத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும் மேற்கொள்ளப்படுகின்றது.

மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவை 4 சேவை வகைகளைக் கொண்டுள்ளதுடன், 2017.12.31ஆந் திகதியாகையில் அவ்வச் சேவை வகைக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

சேவை வகை	பேருந்துகளின் எண்ணிக்கை (பயணிகள் சேவை அனுமதிப்பத்திர எண்ணிக்கை)
சாதாரண	2036
அரை சொகுசு	459
சொகுசு	601
அதி சொகுசு	93
மொத்தம்	**3189**

மூலம்- இயக்குதல் மற்றும் சேவைகள் கண்காணிப்புத் திணைக்களம், தேபோஆ



தேபோஆவினால் செயற்படுத்தப்படும் பேருந்துச் சேவை வகைகள்

மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவைக்காக ஈடுபடுத்தப்படும் பேருந்துகளுக்கு பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குதல், கேள்விப் பத்திர நடைமுறைப்படி இது மேற்கொள்ளப்படுவதுடன், அம்முறைமையினை பின்பற்றுவதன மூலம் கூடிய நம்பிக்கையுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் உரிய பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

அதன் படி, தெற்கு அதிவேகப் பாதை ஊடாக தற்காலிக அனுமதிப் பத்திரத்தில் பேருந்துகள் ஓடும் பாதைகள் மற்றும் ஆய்வின் மூலம் இனங்காணப்பட்ட 10 புதிய பாதைகளுக்காக கேள்விப்பத்திரம் மூலம் புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு 2017.09.29ஆந் திகதிய பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன.
மேற்படி கேள்விப்பத்திரம் 2017.10.20ஆந் திகதி திறக்கப்பட்டது. ஆதன் படி முன்வைக்கப்பட்ட 05 பாதைகளுக்கு 21 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

12. பொதுமக்கள் முறைபாடுகள்

பொதுப் பேருந்துச் சேவையினைப் பயன்படுத்தும் பயணிகளுக்கு நம்பிக்கைமிகு, பாதுகாப்புமிகு மற்றும் சௌகரியமிகு சேவையொன்றினைப் பெற்றுக் கொடுத்தல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஒரே நோக்கமெனினும் எதிர்பார்க்கப்பட்ட சௌகரியமிக்க சேவைக்குப் பதிலாக பயணிக்கும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனவே,நாள் முழுதும் 24 மணி நேரமும் செயற்படும் விசேட குறி இலக்கம் ஒன்றும் (1955) துரித தொலைபேசி அழைப்பு இலக்கம் ஒன்றும் (0112595555) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக மின் அஞ்சல் மற்றும் கடிதம் மூலமாகவும்,பயணிக்கும் மக்கள் ஆணைக்குழுவிற்கு வருகைத் தந்தும் முறைபாடுகளை முன்வைக்கலாம்.

2017ஆம் ஆண்டினுள் அறிவிக்கப்பட்ட பொது மக்கள் முறைபாடுகளின் எண்ணிக்கை 5959ஆக இருப்பதுடன், அவற்றின் மூலம் வெளிப்பட்ட பிரதான குற்றங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

தொ. இல.	முறைபாடுகள் மூலம் வெளிப்பட்ட குற்றங்களின் தன்மை	முறைபாடுகளின் எண்ணிக்கை
01	அதிகரித்த கட்டண அறவீடு/மீதிப் பணத்தைக் கொடுக்காமை	1106
02	பிரயாணிகளுடன் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுதல்	1459
03	அளவுக்கு அதிகமான பிரயாணிகளை ஏற்றுதல்	270
04	முறையாகப் பயணச்சீட்டுக்களை வழங்காமை	466
05	கவனயீனமாக வண்டியை ஓட்டுதல்	546
06	இடைப்பட்ட இடங்களில் தேவையின்றி பேருந்தினை நிறுத்தி பயணிகளை ஏற்றுதல்	210
07	குறிக்கப்பட்ட நேர அட்டவணையை மீறுதல்	422
08	குறிப்பிட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்காமை மற்றும் முடிவிடம் வரை போகாமை	248
09	பேருந்து பயணிகள் போக்குவரத்திற்கு பொருத்தமான நிலையில் இல்லாமை	144
10	குளிரூட்டிகள் ஒழுங்கான முறையில் இயங்காமை	95
11	கூடிய சத்தத்தில் ஒலிப்பதிவு நாடா/ வானொலியை இயக்குதல்/ பொருத்தமற்ற வீடியோ காட்சிகள்	100
	மொத்தம்	**5066**

மூலம்- தரக்கட்டுப்பாடு மற்றும் வெளி உறவுகள் திணைக்களம்- தேபோஆ

தேசிய போக்குவரத்து ஆணைக்குழவிற்கு கிடைக்கப் பெறும் மக்கள் முறைபாடுகளுள், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவைகளுக்குரிய முறைபாடுகள் தொடர்பில் மாத்திரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகத்தில் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், மாகாண சேவைகளுக்குரிய முறைபாடுகளை உரிய மாகாண அலுவலகங்களுக்கு அனுப்பப்படுவதுடன், இலங்கைப் போக்குவரத்துச் சபை சேவைகளுக்குரிய முறைபாடுகள் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் பொதுமக்கள் முறைபாட்டு பிரிவிற்கு கிடைக்கப் பெற்றமுறைப்பாடுகளில் 2017 திசெம்பர் 31ஆந் திகதியாகையில் 4334 முறைபாடுகள் அதாவது 89% தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

13. நடமாடும் சோதனையிடல்கள் மற்றும் விசாரணை

1971 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்து தனியார் பேருந்துகளிற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. அவ்வாறே அவ்வனுமதிப்பத்திரத்தின் கீழ் பயணிக்கும் பேருந்து தொடர்பில் மற்றும் அவற்றில் பணி புரியும் ஊழியர்களால் பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் தொடரொறொன்று ஆணைக்குழுவினால் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்நிபந்தனைகளைப் பின்பற்றுதல் குறித்து சோதனையிடல் நடமாடும் சோதனைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும். அச்சோதனைகளின் போது அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளில் பேருந்துகள் ஓடுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் குறிப்பிட்ட பேருந்துகள் தொடர்பில் விசாரணை செய்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். பயணிகள் சேவை அனுமதிப்பத்திரமின்றி மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளில் ஓடும் பேருந்துகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு உதவிசெய்தலும் தரம்மிக்க பயணிகள் சேவையினை வழங்குவதற்கான பங்களிப்பை வழங்குவதும் நடமாடும் சோதனையிடல் அலகினால் நிறைவேற்றப்படுகின்றது.

மேலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அரசாங்கத்தின் உதவித்தொகை கொண்டு செயற்படும் 'சிசு செரிய' பாடசாலைப் பேருந்துச் சேவை மற்றும் 'நிசி செரிய' இரவு நேரப் பேருந்துச் சேவை என்பனவற்றையும் கண்காணிக்கும் நடவடிக்கைகளும் இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

2017ஆம் ஆண்டினுள் 19374 பேருந்துகள் நடமாடும் சோதனைப் பிரிவினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 'சிசு செரிய','கெமி செரிய'மற்றும் 'நிசி செரிய' செயற்றிட்டங்களுக்குரிய 1841 பேருந்துகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் மூலம் தவறான நடத்தைகள் நடைபெற்றுள்ளன என்பதாக 5363அறிக்கையிடப்பட்ட சந்தர்ப்பங்களில் 5149இற்கான விசாரணை நடவடிக்கைகள் முடிவுற்றுள்ளன. பயணிகள் அனுமதிப்பத்திரங்களை இற்றைப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரக்குரிய வசாரணைகள் இருப்பின் அவ்வெல்லா விசாரணைகளும் முடிவுற்றுள்ளதாகச்சாதாரணமாக சான்றிதழ் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

14. தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை



தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மிகவும் காலத்தின் தேவையான நடவடிக்கையொன்றாக 'தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை'யினை வெளியிட்டமையைக் குறிப்பிடலாம். தரை மார்க்கம், நீர் மார்க்கம், ஆகாய மார்க்கம் ஆகிய மூன்று ஊடகங்களினூடாக மேற்கொள்ளப்படும் போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்பிலான தகவல்களை ஒரே இடத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் முறைமையொன்றாக 'தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை' போக்குவரத்துத் துறையில் உள்ள எல்லா நிபுணர்களினதும் பாராட்டுதல்களைப் பெறும் பெரும் நூலொன்றாக ஆகியுள்ளது. இலங்கைப் போக்குவரத்துச் சபை,இலங்கைப் புகையிரதத் திணைக்களம்,மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை துறைமுக அதிகாரசபை,தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம் உட்பட தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் மற்றும் தரவுகளை ஒன்றுசேர்த்து அத்தரவுகளைப் பல்வேறு கோணங்களிலும் பகுப்பாய்வு செய்து மிகவும் கவர்ச்சிகரமாகத் தயாரிக்கப்படும் இந்த 'தேசிய போக்குவரத்து புள்ளிவிபரவியல் அறிக்கை' தொடர்ந்தும் ஒவ்வொரு வருடமும் அச்சிடப்பட்ட நூலாக மும்மொழிகளிலும் வெளியிடப்படுகின்றது.

போக்குவரத்து குறித்து ஆய்வு செய்யும், திட்டங்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுக்கும் போக்குவரத்து தொடர்பில் கற்கை நெறிகளை மேற்கொள்வோருக்கும் இவ்வறிக்கையினை உசாவுதல் அந்நடவடிக்கைகளுக்கு பெரும் உறுதுணையாக அமையும்.

2017.01.01 முதல் 2017.12.31 வரையிலான வருடத்தின் தகவல்களை உள்ளடக்கி 2017 தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டில் திசெம்பர் மாத இறுதியாகையில் தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கையின் மொழிப் பெயர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் சரிபார்த்தல் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதனை அச்சிட்டதன் பின்னர் போக்குவரத்து தொடர்பிலான பல்வேறு நிறுவனங்கள், பொது நூலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்கு விநியோகிக்கப்படும். 2017ஆம் ஆண்டினுள் அறிக்கையினை அச்சிட முடியாது போயுள்ளதுடன் அதற்காக 2.0 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

15. ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி

நிறுவனமொன்றின் பணிக்குழாத்தினரின் விளைப்பயன்,நிறுவனத்தின் ஒட்டுமொத்த பணிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு ஒரு வலுவான தளத்தை வழங்குகின்றது. அதனால்,நிறுவனத்தின் ஊழியர் குழுவினரை பல்வேறு பாடவிதானங்கள் ஊடாக நிபுணத்துவம் பெறல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நெறிகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் படி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிக்குழாத்தினரைப் பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் மூலம்

நிறுவனத்திற்கு தேவையான அறிவு மற்றும் திறன்களைக் கொண்ட ஊழியர் குழுவொன்றை நிர்மாணிக்கப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் கீழ், 2017ஆம் ஆண்டினுள் வெளிநாட்டு பயிற்சிக்காக ஊழியர்களை ஈடுபடுத்த முடியாமல் போனதாயினும்,அலுவலக முகாமைத்தவத்திற்கான ஆங்கில மொழி,Cyber காப்புறுதி, சிறந்த தொடர்பாடலுக்கான தொழிலாளர் சட்டங்கள், ஒழுக்காற்று நடைமுறைகள்,வருடாந்த பொருட்பதிவேட்டு ஆய்வு மற்றும் சொத்துக்கள் அகற்றல் ஆகிய துறைகளில் அலுவலர்கள் உள்நாட்டு பயிற்சி நெறிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

2017ஆம் ஆண்டினுள் 'ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி' யின் கீழ் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு 5.0 மி.ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதும் அத்தொகை செலவிடப்படாததுடன், உள்நாட்டுப் பயிற்சிக்காக 0.78 மில்லியன்ரூபா செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வருடாந்தக் கணக்கு

திசெம்பர் 31ஆந் திகதியில் ள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2017	2016
சொத்துக்கள்			
நடைமுறையற்ற சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறித்தொகுதி , உபகரணங்கள்	4	420,608,558.22	434,364,750.80
நூலகப் புத்தகங்கள்		1,077,109.81	987,114.03
மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்		**421,685,668.03**	**435,351,864.83**
நடைமுறைச் சொத்துக்கள்			
கிடைக்க வேண்டியவை, வைப்புக்கள், முற்பணம்	5	3,859,132.93	2,603,621.76
பணிக்குழாத்தினர் கிடைக்க வேண்டியவை	6	20,341,998.00	16,277,975.00
முதலீடுகள்- தவணை வைப்புக்கள்	7	31,724,072.16	29,239,785.60
முதலீடுகள் -திறைசேரி உண்டியல்கள்	8	11,610,112.00	10,516,719.00
கிடைக்க வேண்டிய வட்டி		1,753,342.03	27,940,294.23
காசும் காசுக்கு சமமானவையும்	9	491,688,853.64	549,465,785.81
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**560,977,510.76**	**636,044,181.40**
மொத்தச் சொத்துக்கள்		**982,663,178.79**	**1,071,396,046.23**
பொறுப்புக்கள்			
நடைமுறையற்ற பொறுப்புக்கள்			
அரசாங்க மானியங்கள்	10	326,328,051.35	351,987,670.29
இளைப்பாற்று நலன் கடப்பாடுகள்	11	37,088,716.75	34,530,968.33
மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள்		**363,416,768.10**	**386,518,638.62**
நடைமுறை பொறுப்புக்கள்			
செலுத்த வேண்டியவை	12	54,898,338.91	45,478,101.64
மீளச் செலுத்தவேண்டிய கேள்விப்பத்திர வைப்புக்கள்		47,935,404.00	61,559,304.00
ஏற்பாடுகள் மற்றும் சேர் செலவினங்கள்	13	105,944,737.15	28,261,681.21
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**208,778,480.06**	**135,299,086.85**
திரண்ட மிகைகள் /(குறைநிலைகள்)		**410,467,930.63**	**549,578,320.76**
மொத்தப் பொறுப்புக்கள்		**982,663,178.79**	**1,071,396,046.23**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள், இலங்கை அரசாங்கப் பிரிவின் கணக்கீட்டு நியமங்களின் (SLPSAS)பிரகாரம் தாயரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

.....

நிதி உத்தியோகத்தர்

05 முதல் 08 வரையிலான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் 09 முதல் 15 வரையிலான பக்கங்களில் உள்ள குறிப்புக்கள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.

இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந்நிதிக்கூற்றுக்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு, அவர்களின் சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளது.

....

தலைவர் **ஆணைக்குழு உறுப்பினர**

திகதி: ...04.24.2018.....

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு		இலங்கை ரூபாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது	
திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றுகை தொடர்பிலான கூற்று		2017	2016
குறிப்பு			
வருவாய்			
வருவாய்	**14**	434,824,751.08	363,198,667.41
ஏனைய வருமானம்	**15**	68,634,949.22	69,715,306.67
மொத்தம்		**503,459,700.30**	**432,913,974.08**
செலவினங்கள்			
தொழிற்படு செலவுகள்	**16**		
ஆளணி ஊதியங்கள்	**16.1**	124,466,337.03	107,748,371.06
போக்குவரத்து	**16.2**	10,655,493.24	11,694,934.27
பயணச் செலவுகள், பிழைப்பூதியக் கொடுப்பனவு	**16.3**	2,386,000.94	1,728,540.50
நிறுவனச் செலவுகள்	**16.4**	43,457,777.08	29,856,310.52
நிலையான சொத்துக்களின் புதுப்பித்தல்களும் பாரமரிப்பும்	**16.5**	3,693,323.62	2,737,858.13
ஊழியர் நலன்புரி	**16.6**	8,946,466.47	6,950,107.05
பதவியணியினர் அபிவிருத்தி	**16.7**	988,053.05	810,848.00
சட்ட மற்றும் பிற கட்டணங்கள்	**16.8**	811,284.50	1,147,625.50
தகவல்கள்	**16.9**	2,201,997.50	1,686,041.50
தேய்மானம்	**16.10**	22,138,768.08	43,390,110.15
நிதிசார் கட்டணங்கள்	**16.11**	61,302.42	25,943.31
ஏனைய செலவினங்கள்	**16.12**	312,647.44	471,688.91
மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள்		**220,119,451.37**	**208,248,378.90**
ஆண்டிற்கான தொழிற்பாட்டு மிகை/ (குறைநிலை)		**283,340,248.93**	**224,665,595.18**
தொழிற்பாடற்ற வருவாய்	**17**	**-**	**(28,417.50)**
ஆண்டிற்கான தேறிய மிகை/(குறைநிலை)		**283,340,248.93**	**224,637,177.68**
அரசாங்க மானியங்கள்			
கருத்திட்டங்களுக்கான அரச மானியங்கள்	**18**	**457,510,901.00**	**498,348,106.22**
அரசாங்க மானியங்கள் மீதான விசேட கருத்திட்ட செலவினங்கள்	**19.1**	**(461,147,139.71)**	**(498,348,106.22)**
NTC நிதிகள் மீதான விசேட கருத்திட்டச் செலவுகள்	**19.2**	**(118,814,400.35)**	**(34,447,430.64)**
ஆண்டிற்கான தேறிய மிகை/(குறைநிலை)		**160,889,609.87**	**190,189,747.04**

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.
05 முதல் 15 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.

இலங்கை ரூபாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது

17திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள்/ உரிமையாண்மை ற்றங்கள் கூற்று

	திரண்ட மிகை/ (குறைநிலைகள்)
2016 ஜனவரி 01ஆந் திகதியில் மீதி	359,388,573.72
ஆண்டிற்கான மிகை/பற்றாக்குறை	190,189,747.04
2016 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி	549,578,320.76
திறைசேரிக்கு மீண்ட நிதிகள்	300,000,000.00
ஆண்டிற்கான மிகை/பற்றாக்குறை	160,889,609.87
2017 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி	410,467,930.63

இலங்கை ரூபாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது

திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று	குறிப்பு	2017	2016
தொழிற்படு நடவடிக்கைகள் மூலமாக காசுப்பாய்ச்சல்			
ஆண்டிற்கான மிகை/குறைநிலை		160,889,609.87	190,189,747.04
காசு இல்லா அசைவுகள்			
தேய்மானம்		22,138,768.08	43,390,110.15
சொத்துக்களின் அகற்றுகை		-	28,417.50
அரசாங்க மானியங்கள் மீதான கடன்கரைப்பு		(30,248,717.94)	(36,562,519.49)
ஆண்டிற்கான பணிக்கொடைக் கட்டணங்கள்		4,189,026.42	3,429,478.21
வட்டி வருமானம்		(38,386,231.28)	(33,152,787.18)
செயற்படு மிகை/(குறைநிலை)–தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள்		**118,582,455.15**	**167,322,446.23**
கிடைக்க வேண்டியவை, வைப்புக்கள், முற்பணம்		(1,255,511.17)	(507,752.60)
பணிக்குழாத்தினர் கிடைக்க வேண்டியவை		(4,064,023.00)	(855,628.00)
கிடைக்கவேண்டிய வட்டி வருமானம்		26,186,952.20	(12,652,084.29)
செலுத்தவேண்டியவை		9,420,237.27	(54,945,860.75)
மீளச் செலுத்தவேண்டிய கேள்வி வைப்புக்கள்		(13,623,900.00)	27,331,500.00
ஏற்பாடுகள் மற்றும் சேர் செலவினங்கள்		77,683,055.94	(65,233,309.33)
(பயன்படுத்தப்பட்ட) /தொழிற்படு நடவடிக்கைகள் மூலமாக காசு		**212,929,266.39**	**60,459,311.26**
செலுத்தப்பட்ட பணிக்கொடை		(1,631,278.00)	(5,861,994.00)
சொத்துக்களின் அகற்றுகை மூலம் பெறப்பட்ட காசு		-	213,859.50
(பயன்படுத்தப்பட்ட) /தொழிற்படு நடவடிக்கைகள் மூலமாக தேறிய காசுப் பாய்ச்சல்		**211,297,988.39**	**54,811,176.76**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்			
காணி,பொறித்தொகுதி மற்றும் கருவிகள் சுவீகரிப்பு		(8,382,575.50)	(27,792,101.42)
நூலகப் புத்தகங்கள் சுவீகரிப்பு		(89,995.78)	(85,000.00)
திறைசேரி உண்டியல்கள் தவணை வைப்புக்களில் தேறிய முதலீடு		(3,577,679.56)	(6,976,247.50)
வட்டி கிடைப்பனவுகள்		38,386,231.28	33,152,787.18
(பயன்படுத்தப்பட்ட) /முதலீட்டு நடவடிக்கைகள் மூலமாக தேறிய காசுப் பாய்ச்சல்		**26,335,980.44**	**(1,700,561.74)**
நிதிசார் நடவடிக்கைகள் மூலமாக தேறிய காசுப் பாய்ச்சல்			
திறைசேரியிலிருந்து பெறப்பட்ட மூலதன மானியங்கள்/(மீள்கொடுப்பனவு)		(295,410,901.00)	24,697,980.72
(பயன்படுத்தப்பட்ட) /நிதிசார் நடவடிக்கைகள் மூலமாக தேறிய காசுப் பாய்ச்சல்		**(295,410,901.00)**	**24,697,980.72**
ஆண்டிற்குள் காசும் காசுக்கு சமமானவையில் உள்ள தேறிய மாற்றங்கள்		**(57,776,932.17)**	**77,808,595.74**
வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும்		549,465,785.81	471,657,190.07
வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்	**குறிப்பு 9**	**491,688,853.64**	**549,465,785.81**

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.

05 முதல் 15 வரையிலான பக்கங்களில் வழங்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் இந்நிதிக் கூற்றுக்களின் ஓர் ஒன்றிணைந்த பகுதியாகும்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

2017 திசெம்பர் 31 இல் முடிந்த ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

---

1. தாபனத் தகவல்கள்

1.1 அறிக்கையிடும் நிறுவனம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 1991 இல 37 ஐக் கொண்ட தேபோஆ சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் அலுவலகம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும் பிரதான நிலையம் இல 241, பூங்கா வீதி, கொழும்பு 05இல் அமைந்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2017ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிசார் தரவுகள் உள்ளடங்குகின்றன.

1.2 பிரதான பணிகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை

பயணிகள் பேருந்துகள் மூலம் பயணிக்கும் மக்களுக்கு போக்குவரத்துச் சேவையினை வழங்குதல் மற்றும் பயணிகள் பேருந்துகளுக்கான நிச்சயிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் குறித்து இலங்கை அரசிற்கு ஆலோசனைகளை வழங்குதல் என்பனவே ஆணைக்குழுவின் பணியாகும்.

1.3 நிதியாண்டின் இறுதியில் ஆணைக்குழு 193 நிரந்தரமான ஊழியர்களையும் ஒப்பந்த அடிப்படையில் 1 ஊழியரையும் கொண்டிருந்தது.

1.4 அறிக்கையிடும் திகதி

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடும் திகதி திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவுறும்.

1.5 வெளியிடுவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட திகதி

2018/03/21ஆந் திகதியன்று ஆணைக்குழுவின் அங்கத்தவர்களால் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

2.1 தயாரித்தலின் அடிப்படை

அரச மானியங்கள் மற்றும் அரசாங்க நிதி உதவி வெளிப்படுத்தல்கள் கணக்கீடு - LKAS 20- பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க அரச ஏற்பாடுகள் இனங்காணப்பட்டு மற்றும் அளவிடப்பட்டுள்ளதுடன், இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் (SLPSASs)பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ரீதியான உடன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் (SLPSASs)பிரகாரம் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சில சிக்கல்மிகு கணக்கீட்டு மதிப்பீடுகள் தேவையாகும். மேலும் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் படிமுறையில் முகாமையானது அதன் தீர்வுகளைப் பயன்படுத்துதல் அவசியமாகும். நிதிசார் கூற்றுக்களுக்கு முக்கியமான எடுகோள்கள் மற்றும் மதிப்பீடுகள் உள்ள பகுதிகள் அல்லது உயர்ந்த அளவில் தீர்மானங்கள் அல்லது சிக்கல்தன்மை கொண்டுள்ள பகுதிகள் குறிப்பு 3இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.2 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

கீழ் குறிப்பிட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் மாற்றங்கள் வேறு வழியில் குறிப்பிட்டால் ஒழிய நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படும் காலப்பிரிவிற்கு தொடர்ந்தும் பயன்படுத்தப்படும்.

நடப்பு ஆண்டின் விடயங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டு சிறந்த முன்வைப்பிற்காக கடந்த வருடத்தின் நிதிசார் கூற்றறுக்களின் முன்வைத்தல் மற்றும் பகுப்பாய்வு தேவையான இடங்களில் சரிப்படுத்தப்பட்டுள்ளன.

2.3 வெளிநாட்டு நாணய மாற்றம்

2.3.1 தொழிற்படு மற்றும் முன்வைத்தல் நாணய அலகு

நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவை நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் ஆரம்பப் பொருளாதார சூழலின் படியே அளவிடப்படும். நிதிக் கூற்றுக்கள் ஆணைக்குழுவின் முன்வைத்தல் நாணயமான இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளன.

2.3.2 கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவை

வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்கள் தொழிற்படு நாணய கொடுக்கல்வாங்கலாக மாற்றப்படுவது கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற தினத்தில் காணப்பட்ட செலாவணி வீதத்தின் அடிப்படையிலாகும்.

2.4 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் என்பன முகாமையினால் எதிர்பார்க்கப்படும் விதத்தில் செயற்படுத்துவதற்கு இயலுமான இடம் மற்றும் அதற்கு தேவையான நிலைமைக்கு சொத்துக்களை கொண்டு வருவதற்கு நேரடியாக மேற்கொள்ளப்படும் செலவினங்கள் உட்பட ஆரம்பத்தில் செலவில் இனங்காணப்படும்.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் மீதான செலவுகளிலிருந்து திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்கள் ஆகியவற்றைக் கழித்து வரும் வரலாற்றுச் செலவில் குறிக்கப்படும்.

அச்செலவினால் சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுகாலத்தை நீடிக்க முடிந்தால் அதனால் உருவாகும் இலாபங்கள் தாபனத்திற்கு கிடைத்தாலேயே பிந்திய கால செலவுகள் சொத்துக்களின் காவுகைத் தொகையில் உள்ளடக்கவொ அல்லது சொத்தாகவோ இணங்காணப்படுவதுடன், அவ்வுருபடியின் செலவினை நம்பகமான முறையில் அறவிட முடிகின்றது. தாபனம் ஏனைய சொத்துக்களை நாளாந்தம் பராமரிப்பதற்கும் பேணுவதற்கும் மேற்கொள்ளும் செலவுகள் விபரமான வருமானக் கூற்றில் உரிய காலப்பகுதிக்கான செலவாகக் கருதப்படும்.

காணிகள் பெறுமதி இறக்கஞ் செய்யப்படாததுடன், ஏனைய சொத்துக்களின் தேய்மானம் நேர்கோட்டு முறைமையைப் பயன்படுத்தி கீழே காட்டப்பட்டுள்ளவாறு மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயட்காலத்தினுள் செலவு ஒதுக்கப்பட்டு அளவிடப்படும்.

சொத்துக்கள் வகை	வருடம்
மோட்டார் வாகனங்கள்	5 ஆண்டுகள்
தளபாடங்களும் பொருத்திகளும்	10 ஆண்டுகள்
அலுவலக உபகரணங்கள்	5 ஆண்டுகள்
பல்வேறு உபகரணங்கள்	5 ஆண்டுகள்
கணினிகளும் அச்சு இயந்திரங்களும்	4 ஆண்டுகள்
இயந்திரங்கள்	5 ஆண்டுகள்
கட்டடங்கள்	20 ஆண்டுகள்
இலத்திரனியல் காட்சிப் பலகைகள் (LED)	3 ஆண்டுகள்

சொத்தின் காவுகைத் தொகை அதன் மதிப்பிடப்பட்ட மீளப்பெறக்கூடிய தொகையை விடக் கூடுதலாக இருப்பின், அச்சொத்தின் காவுகைத் தொகை உடனடியாக மீளக் கிடைக்கக்கூடிய தொகையில் பதிவு செய்யப்படும்.

நூலகப் புத்தகங்களில் தேய்மானம் வழங்கப்படவில்லை.

2.5 தவணை வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடுகள்

தவணை வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் முதிர்வுப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.6 கிடைப்பனவுகள்

கிடைப்பனவுகள் என்பது பெற்றுக்கொள்ளப்படும் சேவைகளுக்காக செலுத்த வேண்டியுள்ள பணமாகும். கூட்டுத்தொகை சாதாரண தொழிற்படு சுழற்சியில் (ஒரு வருடத்தினுள் அல்லது அதற்குக் குறைவாக) எதிர்பார்க்கப்படுவதுடன், கிடைப்பனவுகள் நடைமுறைச் சொத்துக்களாக

வகைப்படுத்தப்படும். கிடைப்பனவுகளை இனங்காணல் மற்றும் கணிப்பிடல் கொடுக்கல்வாங்கல் செய்யும் பெறுமதியில் இனங்காணப்பட்டு கணிக்கப்படும்.

2.7 காசும் காசுக்கு சமமானவையும்

காசுப் பாய்ச்சல் கூற்றில் கையிலுள்ள பணம், வங்கிகளுடனானஅழைப்பில் உள்ளதவணை வைப்புக்கள்,ஏனைய மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான அசல் முதிர்வுடன் கூடிய குறுங்கால உயர் திரவத்தன்மைக் கொண்ட முதலீடுகள் என்பன காசும் காசுக்கு சமமானவையில் உள்ளடங்குகின்றன.

2.8 கொடுப்பனவுகள்

கொடுப்பனவுகள் என்பது வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்களிடம் இருந்துபெற்றுக்கொள்ளும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்குச் செலுத்த வேண்டிய பொறுப்புக்களாகும். கொடுப்பனவு வர்த்தகத்தில் சாதாரண தொழிற்படு வர்த்தக வட்டத்தில் (1 வருடத்தினுள் அல்லது அதற்குக் குறைவாக) மேற்கொள்ளவேண்டிய கொடுப்பனவு எனின், அது நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படும். அவ்வாறு இல்லாவிடின், அவை நடைமுறையற்ற பொறுப்புக்களாக இனங்காணப்படும்.

கொடுப்பனவுகள் வர்த்தகத்தின் சாதாரண தொழிற்படு வட்டத்தில் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதால், ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் விலையில் இனங்காணப்பட்டு பின்னர் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் விலையில் அளவிடப்படும்.

2.9 அரச மானியங்கள்

மானியங்கள் கிடைக்கப்பெறும் மற்றும் இணைத்துள்ள நிபந்தனைகளுடன் தள்ளுபடி இணங்கும் என்ற நியாமான உத்தரவாதம் உள்ள நிலையில்,நிதிசாரா மானியங்கள் உட்பட அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் மானியங்கள் அவற்றின் நியாயமான பெறுமதியில் இனங்காணப்படும்.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் தொடர்பிலான அரச மானியங்கள் நடைமுறையற்ற சொத்துக்களில் அரசாங்கத்தின் பிற்போடப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், நிதிசார் செயலாற்றுகைக் கூற்றில் இது இனங்காணப்பட்டிருப்பது உரிய சொத்துக்களில் எதிர்பார்க்கப்பட்டட ஆயட்காலத்தில் எளிய நேர்கோட்டு அடிப்படையிலாகும்.

நிதிசாரா சொத்துக்களில் காவுகைப் பெறுமதியில் மற்றும் காவுகைப் பெறுமதியில் மானியம் மற்றும் சொத்துக்கான கணக்கில்நிதிசாரா மானியங்கள் அளவிடப்படும்.

2.10 கடன்பெறும் ஆகுசெலவு

நிதிசார் செயலாற்றுகைக் கூற்றில் கடன்பெறும் ஆகுசெலவுகள் அவை நடைபெறும் காலத்திற்குள் இனங்காணப்படும்.

2.11 ஊழியர் நலன்கள்

ஆணைக்குழு நிலையான நலன்கள் மற்றும் நிலையான பங்களிப்புத் திட்டங்களைக் கொண்டுள்ளது.

(அ) **நிலையான பங்களிப்புத் திட்டம்**

நிலையான பங்களிப்புத் திட்டமானது ஆணைக்குழு நிலையான பங்களிப்புத் தொகையொன்றினைப் பிரத்தியேகமான நிறுவனமொன்றிற்கு செலுத்தக்கூடிய தொழிலுக்குப் பின்னரான நன்மை திட்டமாகும். ஆணைக்குழுவிற்கு கூடுதலான பங்களிப்புத் தொகையொன்றைச் செலுத்தவதற்கு சட்ட அல்லது ஆக்கபூர்வமானபொறுப்பு இல்லை. முதிர்ச்சியடைந்ததன் பின்னர் இப்பங்களிப்புத் தொகை ஊழியர் நன்மை செலவாக இனங்காணப்படும்.

ஆணைக்குழுவினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக(EPF) ஊழியர் ஒருவரின் மொத்த ஊதியத்திலிருந்து 12% பங்களிக்கப்படுவதுடன், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு (ETF) மொத்த ஊதியத்திலிருந்து 3% பங்களிக்கப்படும்.

(ஆ) நிலையான நலன்கள் திட்டம்

ஊழியரின் முதல் வருடம் முதல் பணி புரியும் ஒவ்வொரு வருடத்திற்கும் ½ மாதச் சம்பளத்தினை ஊழியர் பணிக்கொடை நிதியத்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் 1983 பணிக்கொடை நிதியக் கொடுப்பனவுகள் சட்டத்தின் இல 12இன் பிரகாரம் ஊழியர் ஒருவர் 05 வருடங்கள் தொடர்ந்தும் பணிபுரிவதால் பணிக்கொடை நிதியத்தில் உரிமைப் பெறலாம்.

(இ) குறுங்கால ஊழியர் நன்மைகள்

ஊழியர்களினால் நிறைவேற்றப்படும் சேவைகளுக்காக செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தள்ளுபடி தொகை மீதுகுறுங்கால ஊழியர் நலன் பொறுப்புக்கள் அளவிடப்படும்.

2.12 ஏற்பாடுகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்

ஆணைக்குழுவிடமிருந்து பொருளாதார வளங்களின் வெளிப்பாய்வு தேவைப்படும் என்பதுடன் நம்பகமான முறையில் பெறுமானத்தினை மதிப்பீடு செய்யமுடியும் என சாத்தியமாகின்ற நிலையில்,கடந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பெறுபேறாக ஆணைக்குழுவிற்கு தற்போதைய சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடுகள் உள்ள போதுதொழிற்படு செலவினங்களுக்கான ஏற்பாடுகள் இனங்காணப்படும்.

நடப்புக் கடப்பாடு அல்லது பொறுப்புக்கள் தொடர்புபட்ட இடர்கள் மற்றும் ஐயப்பாடுகள் அறிக்கையிடும் நாளில் காணப்படும் மிகவும் நம்பகமான ஆதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு நடப்புக் கடப்பாடுகளும் பொறுப்புக்களைத் தீர்த்தல்/ பூர்த்திசெய்தலிற்கு தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட செலவின் படி ஏற்பாடுகள் கணிக்கப்படும்.

எல்லா எதிர்பாரா பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பொன்றாக தெரிவிக்கப்படாவிடின் வளங்களின் வெளிப்பாய்வின் சாத்தியப்பாடு இல்லாது போகும்.

2.13 வருவாயை இனங்காணல்

ஆணைக்குழுவின் நடவடிக்கைகளில் கிடைக்கப் பெற்ற அல்லது கிடைக்க வேண்டிய சலுகைகளின் நியாயமான பெறுமதியில் வருவாய் அளவிடப்படும். பொருளாதார நன்மைகள் உண்மையிலேயே நிறுவனத்தினுள் உட்பாயும் சந்தர்ப்பத்தில் வருவாயாக இனங்காணல்.

வருவாயின் அளவை நம்பகமாகக் கணிப்பிடக்கூடிய சந்தர்ப்பத்தில் மற்றும் எதிர்காலப் பொருளாதார நன்மைகள் ஆணைக்குழுவிற்குள் உட்பாய்தல் சாத்தியமாகும் போதே ஆணைக்குழு வருவாயை இனங்காண்கின்றது.

முக்கியமான ஒவ்வொரு வருவாயினையும் மதிப்பீடு செய்வதற்கு ஆணைக்குழுவினால் வருவாயை இனங்காண்பதற்காகக் கீழ் குறிப்பிட்டுள்ள பிரமாணங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

(அ) அனுமதிப்பத்திர வருவாய்

எதிர்காலப் பொருளாதார நன்மைகள் ஆணைக்குழுவிற்குள் உட்பாய்தல் சாத்தியமாகும் போது வீதி அனுமதிப் பத்திரங்ககளினால் கிடைக்கும் வருவாய் இனங்காணப்படுகின்றது.

(ஆ) சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் கருவிகள் என்பவற்றை அகற்றுவதால் ஏற்படும் இலாபம் மற்றும் நட்டம்

காவுகைத் தொகையுடன் வருவாயினை ஒப்பிடுவதன் மூலம்அகற்றுகைகளால் ஏற்படும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பன தீர்மானிக்கப்படுவதுடன், நிதிசார் செயலாற்றுகைக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

2.14 செலவினங்கள்

தொழிற்படும் காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட செலவு என்பது அறிக்கையிடும் காலப்பகுதியில் இலாபமாகக் கிடைக்கும் வருமானமாகும்.

2.15அறிக்கையிடும் காலத்தின் பின்னர் ஏற்படும் நிகழ்வுகள்

அறிக்கையிடும் காலத்தின் பின்னர் ஏற்படும் எல்லா பருப்பொருள் நிகழ்வுகளும் கருத்திற் கொள்ளப்படுவதுடன், நிதிக் கூற்றுக்களில் தேவையான இடங்களில் பொருந்தும் வண்ணம் சீராக்கல்கள் மற்றும் வெளிப்படுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.16 கடப்பாடுகள்

அறிக்கையிடும் காலத்தின் இறுதியில் ஏற்படும் எல்லா பருப்பொருள் கடப்பாடுகளும் இனங்காணப்பட்டுள்ளதுடன்,நிதிக் கூற்றுக்களுக்கான் குறிபபுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

3. முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளும்தீர்வுகளும்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முகாமையினால் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு ஆகியவற்றை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்தல் தொடர்பில் பல தீர்வுகள, மதிப்பீடுகள், எடுகோள்கள என்பன பிரயோகிக்கப்படுகின்றன.
சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு ஆகியவற்றின் இணங்கானல் மற்றும் அளவீடு மீதுகுறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தும் மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் தொடர்பிலான தகவல் கீழே தரப்பட்டுள்ளது.

(அ) தேய்வடைந்து செல்லும் சொத்துக்களின் பயன்மிகு ஆயுட் காலம்

முகாமை, சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார பயன்பாட்டின் அடிப்படையில், அறிக்கையிடும் தினத்தில் தேய்வடைந்து செல்லும் சொத்துக்களின் பயன்மிகு ஆயுட் காலத்தின் அதன் மதிப்பீட்டினை மீளாய்வு செய்கின்றது. இம்மதிப்பீடுகளில் உள்ள நிச்சயமற்ற தன்மைக்கு காரணம், குறிப்பிட்ட சில மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உதிரிப்பாகங்களின் பயன்பாட்டினை மாற்றுவதற்கு ஏதுவாகும் வழக்கற்று போன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதாகும்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

இலங்கை ரூபாவில்
தெரிவிக்கப்பட்டுள்ளது

திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

4 சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

இறையில் சொத்துக்கள் - செலவு

இல.	சொத்து வகை	ஆகுசெலவு				தேய்மான வீதம்	தேய்மானம்				தேறிய காவுகைப் பெறுமதி 2017	தேறிய காவுகைப் பெறுமதி 2016
		2017 ஜனவரி 01இல் உள்ளவாறான மீதி	அகற்றுதல்	வருடத்தில் கூட்டல்கள்	2017 திசெம்பர் 31இல் உள்ளவாறான மீதி		2017 ஜனவரி 01இல் உள்ளவாறான மீதி	அகற்றுதல்	வருடத்திற்கான கட்டணம்	2017 திசெம்பர் 31இல் உள்ளவாறான மீதி		
1	காணி	245,000,000.00	-	-	245,000,000.00	-	-	-	-	-	245,000,000.00	245,000,000.00
2	கட்டடம்	174,703,730.43	-	-	174,703,730.43	5%	43,229,118.90	-	8,438,724.20	51,667,843.10	123,035,887.33	131,474,611.53
3	மோட்டார் வாகனங்கள்	75,547,270.00	-	-	75,547,270.00	20%	59,978,549.10	-	4,230,700.00	64,209,249.10	11,338,020.90	15,568,720.90
4	தளபாடங்களும் பொருத்திகளும்	32,141,358.60	-	2,478,494.50	34,619,853.10	10%	14,385,900.61	-	3,034,064.27	17,419,964.88	17,199,888.22	17,755,457.99
5	அலுவலக உபகரணங்கள்	11,975,410.44	-	2,780,682.00	14,756,092.44	20%	11,281,759.91	-	403,148.42	11,684,908.33	3,071,184.11	693,650.53
6	பல்வேறு உபகரணங்கள்	6,124,861.97	-	165,999.00	6,290,860.97	20%	3,554,078.51	-	593,084.98	4,147,163.49	2,143,697.48	2,570,783.46
7	கணினிகளும் அச்சு இயந்திரங்களும	51,965,073.39	-	2,957,400.00	54,922,473.39	25%	30,669,987.40	-	5,436,056.21	36,106,043.61	18,816,429.78	21,295,085.99
8	இயந்திரங்கள்	1,775,637.00	-		1,775,637.00	20%	1,769,196.60	-	2,990.00	1,772,186.60	3,450.40	6,440.40
9	டிஜிட்டல் காட்சிப் பலகைகள்	62,415,360.00	-	-	62,415,360.00	33.33 %	62,415,360.00	-	-	62,415,360.00	-	-
மொத்தம்		**661,648,701.83**	**-**	**8,382,575.50**	**670,031,277.33**		**227,283,951.03**	**-**	**22,138,768.08**	**249,422,719.11**	**420,608,558.22**	**434,364,750.80**

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடரும்

திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்		2017	2016
5 கிடைக்கவேண்டியவை,வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்			
கிடைக்கவேண்டியவை	**குறிப்பு 5.1**	1,659,302.50	577,500.00
வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்	**குறிப்பு 5.2**	2,199,830.43	2,026,121.76
		3,859,132.93	**2,603,621.76**
5.1 கிடைக்கவேண்டியவை			
வருமானம் கிடைக்கவேண்டியது		1,659,302.50	577,500.00
		1,659,302.50	**577,500.00**
5.2 வைப்புக்கள் மற்றும் முற்பணங்கள்			
வைப்புக்கள்		686,500.00	146,500.00
செயற்றிட்டங்களுக்கான முற்பணம்		228,726.75	8,000.00
முற்பணம் - NTC		477,911.02	825,257.50
முன்கூட்டிய கொடுப்பனவு		806,692.66	1,046,364.26
		2,199,830.43	**2,026,121.76**
6 பணிக்குழாத்தினர் கிடைப்பனவுகள்			
இடர்கடன்கள்		18,366,180.00	15,548,025.00
இடர்கடன்		1,274,118.00	-
துணிமணிக்கான முற்பணம்		426,200.00	393,200.00
பண்டிகை முற்பணம்		275,500.00	336,750.00
		20,341,998.00	**16,277,975.00**
7 தவணை வைப்புக்களில் முதலீடு			
தவணை வைப்புக்கள்		31,724,072.16	29,239,785.60
		31,724,072.16	**29,239,785.60**

பணிக்கொடைக் கடப்பாடுகளுக்காக ரூபா.25,286,000.17 (2015- 23,867,443.63) கொண்ட தவணை வைப்புக்களிலான முதலீடுகள் பிரத்தியேகமாகப் பேணப்படுகின்றன.

8 திறைசேரி உண்டியல்களில் முதலீடு			
திறைசேரி உண்டியல்கள்		11,610,112.00	10,516,719.00
		11,610,112.00	**10,516,719.00**

பணிக்கொடைக் கடப்பாடுகளுக்காக ரூபா.11,610,112.00 (2016-10,516,719.00 கொண்ட தவணை வைப்புக்களிலான முதலீடுகள் பிரத்தியேகமாகப் பேணப்படுகின்றன.

9 காசும் காசுக்கு சமமானவையும்			
கையிலுள்ள காசு	**குறிப்பு 9.1**	384,192.00	610,950.00
வங்கியிலுள்ள காசு	**குறிப்பு 9.2**	289,321.65	208,030.11
		491,015,339.9	
குறுகிய தவணை வைப்புக்கள்	**குறிப்பு9.3**	9	548,646,805.70
காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கிற்காகக் காசும் காசுக்கு சமமானவையும்		**491,688,853.64**	**549,465,785.81**
9.1 கையிலுள்ள காசு			
கையிலுள்ள காசு		309,192.00	535,950.00
முற்பண முறையிலுள்ள சில்லறைக் காசு		75,000.00	75,000.00
		384,192.00	**610,950.00**

திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்		2017	2016
9.2 வங்கியிலுள்ள காசு			
மக்கள் வங்கி – நாரஹேன்பிட்டி		289,321.65	208,030.11
		289,321.65	**208,030.11**
9.3 குறுகிய தவணை வைப்புக்கள்			
குறுகிய தவணை மற்றும் அழைப்பு வைப்புக்களில் முதலீடு		55,976,778.67	273,500,000.00
REPOவில் முதலீடு		434,845,956.74	275,000,000.00
சேமிப்புக் கணக்கு – தேசிய சேமிப்பு வங்கி		192,604.58	146,805.70
		491,015,339.99	**548,646,805.70**

பணிக்கொடைக் கடப்பாடுகளுக்காக ரூபா.192,604.58 (2016-146,805.70) கொண்ட சேமிப்பு வைப்புக்கள் பிரத்தியேகமாகப் பேணப்படுகின்றன.

10	**அரசாங்க மானியங்கள்**		
	ஜனவரி 01இல் உள்ளவாறு மீதி	351,987,670.29	363,852,209.06
	வருடத்தில் கிடைக்கப்பெற்ற மானியங்கள்	4,589,099.00	24,697,980.72
	அரசாங்க மானியங்களின் கடன்கழிப்பு	(30,248,717.94)	(36,562,519.49)
	திசெம்பர் 31இல் உள்ளவாறு மீதி	**326,328,051.35**	**351,987,670.29**

இலங்கை அரசிடமிருந்து பெற்ற நாரஹேன்பிட்டி, 241, பூங்கா வீதியில் உள்ள காணி வழங்கிய காலப் பகுதியில் இருந்த நியாயமான பெறுமதியில் பணம் சாரா அரச நிதி மற்றும் சொத்துக்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன், கட்டடத்தின் ஆயுட்காலம் முழுதும் இலாபம் அல்லது நட்டத்தில் மானியத்தை கடன்கழிக்கப்பட்டது.

11	**ஓய்வூதிய நலன்கள் பொறுப்பு**		
	ஜனவரி 01இல் உள்ளவாறு மீதி	34,530,968.33	36,963,484.12
	வருடத்திற்கான இனங்காணப்பட்ட செலவினங்கள்	4,189,026.42	3,429,478.21
	வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்	(1,631,278.00)	(5,861,994.00)
	திசெம்பர் 31இல் உள்ளவாறு மீதி	**37,088,716.75**	**34,530,968.33**

12	**செலுத்தவேண்டியவை**		
	வாடகைக் கொள்வனவுகள்	44,293.79	44,293.79
	முத்திரைக் கட்டணங்கள்	14,375.00	12,425.00
	காப்புறுதி		2,537.00
	பெறுவோன் வரி	26,400.00	9,243.00
	நானாவிதக் கடன்கொடுத்தோர்	351,412.70	351,412.70
	முற்பணமாகப் பெற்றவை	53,835,319.23	44,506,729.96
	செயற்றிட்டங்களுக்கான அரச மானியங்கள்		-
	ஏனைய செலுத்தவேண்டியவை	623,126.19	551,460.19
	EPF செலுத்தவேண்டியவை	3,021.00	
	ETF செலுத்தவேண்டியவை	391.00	
		54,898,338.91	**45,478,101.64**

13	**ஏற்பாடுகள் மற்றும் சேர் செலவினங்கள்**			
	சேர் செலவினங்கள் - செயற்றிட்டங்கள்	**குறிப்பு 13.1**	89,443,772.91	15,232,973.88
	சேர் செலவினங்கள் - மீண்டெழுபவை	**குறிப்பு 13.2**	15,097,138.24	11,824,881.33
	கணக்காய்வுக் கட்டணங்களுக்கான ஏற்பாடு		1,403,826.00	1,203,826.00
			105,944,737.15	**28,261,681.21**

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடரும்

திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்	2017	2016
13.1 சேர் செலவினங்கள் - செயற்றிட்டங்கள் மீண்டெழுபவை		
சமூகரீதியான கடப்பாடுடைய பேருந்துச் சேவைகளின் ஏற்பாடு	73,406,171.00	14,756,325.00
தனியார் பேருந்துத் தொழிற்றுறையின் சீராக்கம்	127,070.00	151,640.00
துரம் மற்றும் கட்டண விதிகள்	765,066.63	244,985.00
வீதிப் பாதுகாப்புச் செயற்றிட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்	427,299.94	
தேசிய போக்குவரத்து தரவுகள் சேகரிப்பு		-
	74,725,607.57	**15,152,950.00**
மூலதனம்		
பார் பேருந்துத் தொழிற்றுறையின் சீராக்கம்	14,155,726.26	-
புதிய சீராக்கல்கள் மற்றும் உட்டகட்டமைப்பு அபிவிருத்திக்கான நியாமனத் திறனை உறுதிப்படுத்த நிறுவனஞ்சார் தறனைக் கட்டியெழுப்பல்	562,439.08	80,023.88
	14,718,165.34	**80,023.88**
	89,443,772.91	**15,232,973.88**

13.2 சேர் செலவினங்கள் - மீண்டெழுபவை		
சீராக்கற் உதவுதொகை	83,703.00	58,712.00
மிகை ஊதியம்	-	42,500.00
துப்புரவாக்கல் சேவை	711,014.55	2,061,315.38
தொடர்பாடல்	237,198.09	196,350.02
வாழ்கைச் செலவு கொடுப்பனவு	96,544.00	46,800.00
மின்சாரம் மற்றும் வலு	626,254.58	1,097,241.02
ஊழியர் நலன்புரி	175,868.00	731,500.00
ஊழியர் மருத்துவத் திட்டம்	34,173.34	90,750.04
EPF	1,600.00	-
ETF	320.00	-
பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைகளைக் காசாக்கல்	6,261,216.52	4,868,934.45
எரிபொருள் மற்றும் மசகெண்ணெய்	338,599.68	300,345.92
விடுமுறைக் கொடுப்பனவு- நிறைவேற்று	-	-
சட்ட கட்டணம்	29,500.00	32,303.00
உள்நாட்டுப் பயணம்	118,447.50	80,572.50
அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதி	-	20,460.00
கட்டடப் பராமரிப்பு	40,260.00	12,675.00
கணினிப் பராமரிப்பு	-	21,250.00
அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு	57,430.73	64,477.90
தொழில்வாண்மைப் பிரிவினருக்கான உறுப்புரிமைக் கட்டணம்	-	4,000.00
கூட்டங்களுக்கான உணவுகள் மற்றும் சிற்றுண்டிகள்	6,822.00	2,880.00
செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகள்	9,500.00	11,900.00
அலுவலகத் தேவைப்பாடுகள்	3,150.00	495,413.50
மேலதிக நேர மற்றும் விடுமுறை – நிறைவேற்று அதிகாரமற்ற	23,046.00	21,196.00
மோட்டார் வாகனங்களின்R & M	1,004,215.71	879,365.45

வீதங்கள்	36,036.00	-
சம்பளங்களும் ஊதியங்களும்	289,571.00	118,578.00
இடைக்காலக் கொடுப்பனவு	-	6,000.00
பாதுகாப்புச் சேவை	4,576,877.04	284,282.30
பணிக்குழாத்தினர் பயிற்சி	-	190,098.00
போக்குவரத்து மற்றும் வாடகைக் கட்டணங்கள்	238,832.00	-
நீர்	77,958.50	62,880.85
பற்றுச்சீட்டுகளுக்கான முத்திரை	19,000.00	22,100.00
	15,097,138.24	**11,824,881.33**

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடரும்

திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்		2017	2016
14	**வருவாய்**		
	14.1 அனுமதிப்பத்திர வருவாய்		
	பயணவழி அனுமதிப்பத்திர வருமானம்	160,500.00	522,000.00
	அனுமதிப்பத்திர புதுப்பித்தல் வருமானம்	21,256,912.00	56,732,450.00
	பயணவழி விலைமனு வருமானம்	352,778,497.73	252,364,556.64
		374,195,909.73	**309,619,006.64**
	14.2 ஏனைய வருவாய்கள்		
	நிர்வாகஞ்சார் வருவாய்	32,744,465.00	32,880,491.00
	பெஸ்ரியன் மாவத்தை மலசலகூட வருமானம்	7,598,552.50	7,507,500.00
	பல்வேறுபட்டவை	20,285,823.85	13,191,669.77
		60,628,841.35	**53,579,660.77**
	மொத்த வருவாய்	**434,824,751.08**	**363,198,667.41**
15	**ஏனைய வருமானம்**		
	15.1 வட்டி வருமானம்		
	வைப்புக்கள் மீதான வட்டி	37,676,271.28	32,538,978.18
	இடர் கடன் மீதான வட்டி	709,960.00	613,809.00
		38,386,231.28	**33,152,787.18**
	15.2 ஏனையவை		
	அரசாங்க மானிணங்களின் கடன்கழிப்பு	30,248,717.94	36,562,519.49
		30,248,717.94	**36,562,519.49**
		68,634,949.22	**69,715,306.67**
16	**செயற்பாட்டுச் செலவினங்கள்**		
	16.1 ஆளணி ஊதியங்கள்		
	சம்பளங்களும் கூலிகளும்	71,722,903.98	62,548,674.45
	வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு	17,414,506.00	14,775,588.00
	தொழிலவாண்மைசார் கொடுப்பனவு	186,000.00	-
	மொழிக் கொடுப்பனவு	208,054.00	199,189.00
	ஊழியர் சேமலாப நிதியம்	12,407,580.29	11,524,444.03
	ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்	2,481,516.06	2,304,888.20
	விடுமுறைக் கொடுப்பனவு – நிறைவேற்று	578,517.00	215,647.50
	மேலதிக நேர மற்றும் விடுமுறைக் கொடு – நிறைவேற்று அதிகாரமற்ற	6,005,266.00	5,418,054.88
	பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறை காசாக்கல்	6,591,717.28	5,191,156.79
	பணிக்கொடை	4,189,026.42	3,429,478.21
	மிகையூதியம்	2,681,250.00	2,141,250.00
		124,466,337.03	**107,748,371.06**

16.2 போக்குவரத்து

மோட்டார் வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு	4,879,077.08	6,114,324.19
எரிபொருள் மற்றும் மசகெண்ணெய்	3,504,857.99	3,564,211.38
போக்குவரத்து மற்றும் வாடகைக் கட்டணங்கள்	1,055,658.67	650,863.00
அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி	1,215,899.50	1,365,535.70
	10,655,493.24	**11,694,934.27**

16.3 பயணம் மற்றும் பிழைப்பூதியம்

வெளிநாட்டுப் பயணம்	15,850.00	-
உள்நாட்டுப் பயணம்	2,370,150.94	1,728,540.50
	2,386,000.94	**1,728,540.50**

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடரும்

திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்தஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்	2017	2016
16.4 தாபனச் செலவினங்கள்		
அலுவலகத் தேவைகள் (காகிதாதிகள் மற்றும் அச்சிடல்)	5,411,484.05	5,193,355.47
துப்புரவாக்கல் சேவை	8,160,568.64	6,851,148.04
வீதங்கள்	348,481.00	288,288.00
பாதுகாப்புச் சேவை	16,531,050.44	5,350,660.28
மின்சாரம் மற்றும் வலு	7,911,330.91	7,970,986.71
நீர்	587,790.68	597,052.58
சபை உறுப்பினர்களின் கட்டணங்கள்	1,144,700.00	847,500.00
கூட்டங்களுக்கான உணவுகள் மற்றும் சிற்றுண்டிகள்	387,723.44	273,279.81
காப்புறுதி – வழியில் நின்ற காசு	67,977.91	53,978.63
தொடர்பாடல்	2,906,670.01	2,430,061.00
	43,457,777.08	**29,856,310.52**
16.5 நிலையான சொத்துக்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு		
கட்டடப் பராமரிப்பு	1,585,130.46	694,204.01
அலுவலக உபகரணப் பராமரிப்பு	1,897,995.27	1,776,946.55
கணினி உபகரணப் பராமரிப்பு	210,197.89	266,707.57
	3,693,323.62	**2,737,858.13**
16.6 பணிக்குழாத்தினர் நலன்புரி		
ஊழியர் மருத்துவத் திட்டம்	2,317,755.81	1,924,351.61
ஊழியர் நலன்புரி	5,719,340.83	4,694,460.44
சீருடை	909,369.83	331,295.00
	8,946,466.47	**6,950,107.05**
16.7 பணிக்குழாத்தினர் அபவிருத்தி		
பணிக்குழாத்தினர் பயிற்சி	777,312.78	591,348.00
தொழில்வாண்மைப் பிரிவினர் உறுப்புரிமைக் கட்டணம்	210,740.27	219,500.00
	988,053.05	**810,848.00**
16.8 சட்ட மற்றும் ஏனைய கட்டணங்கள்		
கணக்காய்வுக் கட்டணங்கள்	200,000.00	216,500.00
சட்ட கட்டணங்கள்	611,284.50	931,125.50
	811,284.50	**1,147,625.50**

16.9 தொடர்பாடல்		
பத்திரிகை அறிவித்தல்கள்	2,097,657.50	1,526,704.00
செய்தித்தாளகள் மற்றும் சஞ்சிகைகள்	104,340.00	159,337.50
	2,201,997.50	**1,686,041.50**
16.10 தேய்மானம்		
கட்டடம்	8,438,724.20	8,614,771.25
மோட்டார் வாகனங்கள்	4,230,700.00	6,759,254.47
தளபாடங்கள் மற்றும் பொருத்திகள்	3,034,064.27	2,572,230.58
அலுவலக உபகரணங்கள்	403,148.42	825,277.56
பல்வேறு உபகரணங்கள்	593,084.98	558,721.54
கணினிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள்	5,436,056.21	3,228,859.11
இயந்திரங்கள்	2,990.00	2,990.00
டிஜிட்டல் காட்சிப் பலகைகள்	0.00	20,828,005.64
	22,138,768.08	**43,390,110.15**
16.11 நிதிசார் கட்டணங்கள்		
வங்கிக் கட்டணங்கள்	61,302.42	25,943.31
	61,302.42	**25,943.31**

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் தொடரும்

திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்தஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்		2017	2016
	16.12 ஏனைய செலவினங்கள்		
	பல்வேறு செலவினங்கள்	235,497.44	395,113.91
	பற்றுச்சீட்டுக்களுக்கான முத்திரைகள்	77,150.00	76,575.00
		312,647.44	**471,688.91**
17	**செயற்பாடற்ற வருவாய்**		
	சொத்துக்களின் அகற்றுகை	-	(28,417.50)
		-	(28,417.50)
18	**செயற்றிட்டங்களுக்கான அரசாங்க மானியங்கள்**		
	செயற்றிட்டங்களுக்கான அரசாங்க மானியங்கள் - மீண்டெழுபவை	393,100,000.00	428,700,172.30
	செயற்றிட்டங்களுக்கான அரசாங்க மானியங்கள் - மூலதனம்	64,410,901.00	69,647,933.92
		457,510,901.00	498,348,106.22
19	**19.1 அரசாங்க மானியங்கள் மீதான விசேட செயற்றிட்டச் செலவினங்கள்**		
	மீண்டெழும் செயற்றிட்டச் செலவினங்கள்	393,100,000.00	428,700,172.30
	மூலதனச் செயற்றிட்ட செலவினங்கள்	68,047,139.71	69,647,933.92
		461,147,139.71	**498,348,106.22**
	19.2 NTC நிதியங்கள் மீதான விசேட செயற்றிட்டச் செலவினங்கள்		
	மீண்டெழும் செயற்றிட்டச் செலவினங்கள்	112,868,478.80	26,207,803.56
	மூலதனச் செயற்றிட்ட செலவினங்கள்	5,945,921.55	8,239,627.08
		118,814,400.35	**34,447,430.64**

அடைப்புக்குறிக்குள் இருக்கும் எண்கள் கழித்தல்கள் ஆகும்.
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. | சீபீபி/ஏ/என்ரீச்/ஸ்ஏ/01/2017/28

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date | 2018 ஒக்தோபர் 15

NATIONAL TRANSPORT COMMISSION No.

தலைவர்,
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 37 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்மாணிப்பதற்கான தற்துணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02

நியமத்தின் 31 ஆம் பந்தியின் பிரகாரம் நியமத்தில் இடமளிக்கப்பட்ட தேறிய அடிப்படையில் அறிக்கையிடல் காசுப்பாய்ச்சல் தவிர முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடுகளில் இருந்து வருகின்ற மொத்த காசு பெறுவனவுகளிலும் மொத்தக் காசு கொடுப்பனவுகளிலும் பிரதான வகுப்புக்கள் தனியாக அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், மூலதன மானியமாக திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 4,589,099 தொகை மற்றும் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா 300,000,000 தொகை தனியாகக் காண்பிக்கப்படாமல் தேறிய விளைவான ரூபா 295,410,901 மாத்திரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

அரசாங்க மாளியக் கணக்கில் வைப்பதற்குரிய கணக்கீட்டுக் கொள்கை இனங்காணப்பட்டிருந்த போதிலும், மானியமாகக் கிடைக்கின்ற காணிகளை கணக்கீடு செய்தல் தொடர்பாக உரிய கொள்கையில் உட்படுத்தப்படவில்லை. 2012 ஆம் ஆண்டின் போது மூலதன மானியங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 134,279,913 பெறுமதியான காணிகள் அந்த ஆண்டின் போது சொத்தாகவும் அந்த அளவிற்கு வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக காணிக்காக 5 சதவீத பெறுமானதேய்வு கணிப்பிடும் போது ரூபா 6,713,995 மாத்திரம் அரசாங்கத்தின் மானியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருமானக் கூற்றில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிக்கொடை கணிப்பீடு செய்யும் போது பூர்த்தி செய்யப்பட வருடங்களின் எண்ணிக்கையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும், பணிக்கொடை ஒதுக்கீடுகள் கணிப்பீடு செய்யும் போது முழுமையான வருடங்களின் எண்ணிக்கையுடன் மாதங்களின் எண்ணிக்கையும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டமையால் 69 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 754,642 தொகை அதிகரித்து பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த அளவினால் பணிக்கொடை ஒதுக்கீடுகள் கணக்குகளில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சிசு செரிய, நிசி செரிய மற்றும் கெமி செரிய செயற்திட்டங்களுக்காக அட்டுறு செலவினத்திற்காக முன்னைய ஆண்டில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக முன்னைய ஆண்டிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 38,299,494 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமை மற்றும் மீளாய்வாண்டிற்குரிய அட்டுறு செலவினத்திற்காக ரூபா 7,429,132 தொகை குறைத்து ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 30,870,362 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிறுவனத்தின் கட்டிடத்தின் திருத்த நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 5,903,071 தொகை கட்டிட கணக்கில் மூலதனமாக்காமல் செயற்திட்டச் செலவினமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் வரவு வைக்கப்பட்டமையின் காரணமாக சொத்துக்கள் மற்றும் செயற்பாட்டு இலாபம் என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள்கொள்வனவு முதலீடுகளில் (REPO) முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 434,845,956 தொகைக்காக மீளாய்வாண்டில் பெறவேண்டிய வட்டி ரூபா 1,780,942 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட காகிதாகிகள் மற்றும் அச்சிடல் பொருள் இருப்புக் கணக்கில் காணப்பட்ட ஆரம்ப மீதி மற்றும் எஞ்சிய இருப்புக்களுடன் சீராக்கி ஆண்டின் போது பயன்படுத்திய அளவை மாத்திரம் செலவாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ஆண்டின் போது கொள்வனவு

செய்யப்பட்ட ரூபா 5,276,646 தொகையான காகிதாதிகள் மற்றும் அச்சிடல் இருப்புச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியின் போது காணப்பட்ட இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 40 புத்தகங்கள் வீதம் தற்காலிக பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திர புத்தகத் தொகுதிகள் 21 உம், உள்ளபடியான பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களில் 100 புத்தகங்கள் வீதமுமாக 24 தொகுதிகள் மற்றும் 1000 அலகுகள் வீதமான விசேட பிரயாண அனுமதிப்பத்திரங்களின் 14 தொகுதிகள் காணப்பட்ட போதிலும் அவை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்
(அ) 1971 இன் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம்	
(i) அதிகாரச்சட்டத்தின் 10(5) பிரிவு	ஆணைக்குழுவின் ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் கிடைக்கின்ற தேறிய வருமானத்திலிருந்து மீதியாகின்ற அனைத்துத் தொகைகளும் இணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஆணைக்குழுவின் ரூபா 109 மில்லியன் முதல் ரூபா 190 மில்லியன் வரையில் மிகை காணப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய	நிதி அமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரமின்றி பணிப்பாளர்

	பீஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு	நாயகத்தின் அங்கீகாரத்தின் மேல் ரூபா 534,156,919 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 756	ஆணைக்குழுவால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(இ)	1978 திசெமபர் 18 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை	சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை	சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி மற்றும் மென்பொருள் தொடர்பாக தனியான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட வேண்டியிருந்த போதிலும், ஆணைக்குழுவின் ரூபா 51,965,073 பெறுமதியான கணனி மற்றும் மென்பொருள் என்பவற்றுக்காக அவ்வாறு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் ரூபா 160,889,609 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 190,189,747 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 29,300,138 வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் வருமானம் ரூபா 70,545,726 இனால் அதிகரித்திருந்த போதிலும், விசேட செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா

84,366,969 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகக் காணப்பட்டது.

மீளாய்வாண்டினதும், கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை காணப்பட்டாலும் 2012, 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மிகை காணப்பட்டது. எனினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கியதன் பின்னர் 2012 ஆம் ஆண்டில் ரூபா 109,057,130 தொகையான ஆணைக்குழுவின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டில் ரூபா 80,262,665 மறைப் பெறுமதியாக ஆகியிருந்த போதிலும், மீண்டும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 307,494,715 வரை வளர்ச்சியடைந்திருந்தது.

3.2 ஆணைக்குழுவிற்கு எதிராக அல்லது ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனுமதிப்பத்திரம் மற்றும் கேள்வி அதிகரிக்கும் வழிகளை நீடித்தல் போன்ற விடயங்களுக்குரிய 22 வெளித்தரப்பினர்களால் ஆணைக்குழுவிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 22 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ஆ) அவ்வாறே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அனுமதிப்பத்திரம் தொடர்பாக 03 வழக்குகளும், பெஸ்தியன் மாவத்தையில் ஆசன ஒதுக்கீடுகள் தொடர்பாக 01 வழக்கும், கொழும்பு பதுளை வீதியில் நேர அட்டவணை விநியோகித்தல் தொடர்பாக 01 வழக்கும் ஆக 05 வழக்குகள் ஆணைக்குழுவிற்கு எதிராக விசாரணையில் காணப்பட்டன.

(இ) போக்குவரத்து ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியான பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் இன்றி பேருந்துகள் ஓட்டத்தில் ஈடுபடுவதற்காக உரிய தரப்பினருக்கு ஆணைக்குழுவால் நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட 16 வழக்குகள் விசாரணையில் காணப்பட்டது.

(ஈ) ஆணைக்குழுவிற்கு எதிராக பேருந்து இருக்கைகளின் தரநியமம் தொடர்பாக ஒரு வழக்கும், அனுமதிப்பத்திரம் தொடர்பாக 02 வழக்குகளும் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணையில் காணப்பட்டன.

(உ) சேவை முடிவுறுத்தப்பட்டமை தொடர்பாக ஆணைக்குழுவிற்கு எதிராக தொழில்நியாய சபையில் தொடரப்பட்ட 03 வழக்குகள் விசாரணையில் காணப்பட்டன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட கீழே குறிப்பிடப்படுகின்ற இலக்குகள் பூரணப்படுத்த முடியாதிருந்தது.

(அ) 03 கெமிசெரிய சேவைகள் காணப்பட்டதுடன் அதில் 28 சேவைகளை அதிகரிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 06 சேவைகள் வரை மாத்திரம் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் 25 சேவைகளை அதிகரித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) நிசி செரிய செயற்திட்டத்தின் கீழ் சேவைகளை 123 முதல் 158 வரை அதிகரித்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 130 வரை மாத்திரம் அதிகரித்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 28 புதிய சேவைகளை திட்டமிடப்பட்ட பிரகாரம் அதிகரித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(இ) கிளிநொச்சி பேருந்து நிலையத்தின் நிர்மாண நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 50 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஈ) யாழ்ப்பாண பேருந்து நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 150 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிர்மாண நடவடிக்கைகளில் 40 சதவீதம் மீளாய்வாண்டில் மேற்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது நிர்மாண நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(உ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கட்டிடத்தை மீளமைக்கும் நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டில் முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதில் திட்டக் கட்டம் மாத்திரம் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஹிங்குக்கொட பேருந்து நிலையத்தின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது 30 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2018

யூலை 12 கணக்காய்வுத் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) ஆணைக்குழுவிலிருந்து பேருந்து வண்டி மற்றும் பிரயாணிகளின் தகவல்களை அவதானிப்பதற்காக ஜீ.பீ.எஸ் கணனி மென்பொருள் வசதிகள் முறைமையொன்றைக் கட்டுயெழுப்புவதற்கு செயற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இதற்காக ரூபா 17,570,635 தொகையான கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஜீ.பீ.எஸ் (Global Position System) கணனி மென்பொருள் வசதி முறைமையின் கீழ் 3271 பேருந்துகள் வண்டிகளுக்கு உரிய உபகரணங்கள் பொருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 767 பேருந்து வண்டிகளுக்கு மாத்திரமே பொருத்தப்பட்டிருந்தது. அதில் சிம்காட் 697 பேருந்து வண்டிகளுக்கு மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பேருந்து வண்டித் தொகுதியில் 79 சதவீதம் ஜீ.பீ.எஸ் தொழில்நுட்பத்தை அழுல்படுத்தும் நிலையில் காணப்படவில்லை.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணம் அறவிடும் முறை காண்பிக்கப்படாதிருந்ததுடன், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா 3,000 வருடாந்த கட்டணமொன்றின் கீழ் அந்த அனுமதிப்பத்திரம் வழங்குதல் இடம்பெற்றிருந்தது. இந்த அனுமதிப்பத்திரம் உறவினர் அடிப்படையில் மாத்திரம் வேறொருவருக்கு கையளிக்கும் போது வருடாந்தம் ரூபா 15,000 கட்டணமொன்றின் கீழ் 2010 ஆம் ஆண்டு முதல் புதிதாக வழங்குகின்ற அனுமதிப்பத்திர கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டு தெரிவு செய்யப்பட்ட நபருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஒரே வகைக்கான கட்டணம் 03 வகைகளின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆணைக்குழுவின் 2018 யூலை 05 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட 3171 மொத்த அனுமதிப்பத்திரங்களில் 62 சதவீதமும், ரூபா 3,000 தொகையான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்ததுடன் மொத்த அனுமதிப் பத்திரங்களில் 29 சதவீதம் ரூபா 15,000 தொகையான வருடாந்த புதுப்பித்தல் கட்டணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், மொத்த அனுமதிப்பத்திரங்களில் 91 சதவீதம் கேள்வி கோரலின்றி

வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு கிடைக்கக் கூடியதாக இருந்த கணிசமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக சாதாரண மற்றும் அதிவேக வீதிகளுக்காக ஆய்வு மேற்கொள்வதன் மூலம் புதிய வீதிகளை இனங்கண்டு, புதிய பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 25(ஆ) பிரிவின் பிரகாரம் ஒரு வருடத்திற்குக் குறையாததும், மூன்று வருடங்களுக்கு மேற்படாததுமான காலப்பகுதிக்காக அமுலாகும் வரையில் பிரயாணிகளின் சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணான வகையில் மீளாய்வாண்டில் பின்வரும் அடிப்படையில் தற்காலிக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(i) சாதாரண வீதிகளுக்காக நாளொன்றிற்கு ரூபா 200 கட்டணம் அறவிடும் அடிப்படையில் மற்றும் பிரதான அலுவலகம், பெஸ்தியன் மாவத்தை அலுவலகம் மூலம் 5819 தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் தென் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் நாளொன்றிற்கு ரூபா 1,500 மற்றும் ரூபா 1,000 வீதம் அறவிடப்பட்டு முறையே 2274 மற்றும் 2050 ஆக கூட்டுமொத்தமாக 4324 தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. மேலும், அதிவேக வீதியில் 2015 யூலை 25 ஆந் திகதி முதல் 2017 யூன் 30 வரையான காலப்பகுதியில் 65 அதிசொகுசு பேருந்து வண்டிகளுக்காக நாளொன்றிற்கு ரூபா 2,500 வீதம் அறவிட்டு தற்காலிக பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. 2017 யூலை 01 ஆந் திகதி முதல் மேற்கூறப்பட்ட 65 பேருந்து வண்டிகளில் 48 பேருந்து வண்டிகளுக்காக நிறுவனத்தால் கணிப்பீடு செய்யப்பட்ட தினமொன்றில் ஆகக் குறைந்த தொழில்நுட்ப பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றி போட்டியாளர் கூறுவிலைகளைப் பெற்று அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக நபர்கள் தெரிவு செய்யப்படாமையினால் நிறுவனத்திற்கு பெறக்கூடியதாக இருந்த வருமானம் குறைவடைந்திருந்தது.

(ii) ஆணைக்குழுவில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் அல்லாத நேரக் குறிப்பாளருக்கு தற்காலிக அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மஹரகம, கடுவெல மற்றும் கடவத்த பேருந்து நிலையங்களில் நேரக் குறிப்பாளரால் நாயொன்றுக்கு ரூபா 1,500 மற்றும் ரூபா 1,000 வீதம் அறவிடப்பட்டு முறையே 947 மற்றும் 25 ஆக 972 அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

(ஈ) தென் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு 2017 செப்தெம்பர் முதல் 2018 மே மாதம் வரை வழங்கப்பட்டிருந்த 139 தற்காலிக அனுமதிப்பத்திரப் புத்தகங்கள், காசு மற்றும் அலுவலக பிரதியுடனான புத்தகங்கள் என்பன 2018 யூலை 19 கணக்காய்வுத் திகதி வரையிலும் மீள ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவது ஒரு நபருக்கு கையளிக்கப்பட்ட பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரமொன்று இன்னொருவருக்கு கையளிக்க முடியாதிருந்ததுடன், அவ்வாறான கையளித்தல் பூச்சியம் மற்றும் அதிகாரமற்றதாகும். எனினும் ரூபா 5,000 கையளித்தல் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணமாக வருடாந்தம் ரூபா 15,000 வீதம் அறவிடும் அடிப்படையில் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது 63 அனுமதிப்பத்திரங்கள் உறவினர்களின் அடிப்படையில் உரித்து மாற்றப்பட்டிருந்தது.

(ஊ) அதிவேக வீதிக்கு வெளிச் சுற்றுப்பாதை ஊடாக பிரதான நகரங்களுக்கு பேருந்துகள் ஓட்டத்தில் ஈடுபடும் இயலுமை தொடர்பான ஆய்வொன்றைச் செய்வதற்கு மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஆணைக்குழு அதற்காக ரூபா 2,127,465 செலவினமொன்றைச் செய்திருந்தது. அதற்காக மொறட்டுவ பல்கலைக்கழகம் இடைக்கால அறிக்கையை மாத்திரம் 2015 ஆகஸ்ட் 04 ஆந் திகதி சமர்ப்பித்திருந்ததுடன், புதிய செயற்திட்டமாக அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், பல்கலைக்கழகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மதிப்பீட்டுடன் ஆணைக்குழு இனங்காதிருந்ததுடன், ஆணைக்குழுவினால் அந்த செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், 2018 யூலை 19 கணக்காய்வுத் திகதி வரையிலும், அந்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு முடியாதிருந்தது.

(எ) வட மாகாணத்தில் பிரதானமான பேரூந்து இடமாறல் நிலையமொன்றாக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 166,393,051 செலவில் வவுனியா நகரத்தில் பேரூந்து நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பந்தகாரரால் 2017 சனவரி 15 ஆந் திகதி ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அத்திகதி முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த பேரூந்து நிலையம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அக்காலத்தில் அந்தப் பதவியணியினரின் சம்பளம், சுத்திகரித்தல் செலவினம், மின்சாரம், தொலைபேசி மற்றும் நீர்ப்பட்டியல்களுக்காக ரூபா 2,807,541 செலவிடப்பட்டிருந்ததுடன் பேரூந்து நிலையத்தை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினர் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இந்தக் கிரயம் பயனற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

4.3 பதவியணியினர் நிர்வாகம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை உள்ளபடியான பதவியணியினருடன் ஒப்பீடு செய்த போது 15 பதவிகளில் வெற்றிடம் காணப்பட்டதுடன் 03 பதவிகளில் மிகை காணப்பட்டது. வெற்றிடமான பதவிகளில் 05 பதவிகள் நிறைவேற்று மட்டத்தின் பதவிகளாக இருந்ததுடன் 2018 யூலை 16 ஆந் திகதி வரையிலும் அந்த பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் இடம்பெறாதிருந்ததுடன் பதில் கடமை அடிப்படையில் அந்தப் பதவிகளின் கடமைகள் மேவுகை செய்யப்பட்டிருந்தது. பணிப்பாளர் நிதி மற்றும் பெறுகை பதவிகளில் வெற்றிடம் காணப்பட்டமையின் காரணமாக நிதி அதிகாரங்கள் பகிர்ந்தளித்தல் தொடர்பாகவும், நிறுவனத்தின் பெறுகை நடவடிக்கைகளை உரிய பிரகாரம் மேற்கொள்வதற்கு தடையாக இருந்தது.

5. நிலைபேறான அபிவிருத்தி

5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 "நிகழ்ச்சி நிரல்" தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிந்திருந்ததுடன், அதன் பணிகள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைய வேண்டிய கட்டங்களையும், இலக்குகளையும் அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

பிரகாரம் 2017 மார் 18 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், நிர்மாணங்கள் 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதியே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த பேரூந்து நிலையம் மக்களுக்கு 2018 ஆகஸ்ட் 22 ஆந் திகதியே திறந்து வைக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னரும், ஒரு வருட காலம் கடந்திருந்த போதும் இந்த பேரூந்து நிலையம் பொதுமக்களுக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு செயற்திட்ட நடவடிக்கைகள் நீண்டகாலம் தாமதமாகியமை தொடர்பில் ஆணைக்குழு கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீட்டை உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது வருமானம் மற்றும் செலவினங்களின் 15 தலைப்புக்களில், 10 சதவீதம் முதல் 160 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்		அவதானிப்புக்கள்
(அ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு	(i)	கேள்வி கோரல்களின் மூலம் பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படாமை.
	(ii)	அனுமதிப்பத்திரம் விநியோகித்தலில் தாமதம்
	(iii)	அனுமதிப்பத்திரம் தொடர்பாக நாளதுவரையான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு பேணப்படாமை.



(iv) தற்காலிக சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டமை.

(v) உறுதிச்சீட்டுக்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை.

(vi) சகல கொடுப்பனவுகளும் உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட தொகை என உறுதிப்படுத்தப்படாமை

(ஆ) பெறுகை நடவடிக்கைகள் — விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படாமை மற்றும் பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமல் பெறுகைகள் இடம்பெற்றமை.

(இ) பதவியணியினர் நிர்வாகம் — வெற்றிடத்திற்காக ஊழியர்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை.

(ஈ) நிதிக் கட்டுப்பாடு — திறைசேரியிலிருந்து பெறப்பட்ட பணம் உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாமை

(உ) வாகனக் கட்டுப்பாடு

(i) 06 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படாமை

(ii) நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் எரிபொருள் சமப்படுத்தல் மேற்கொள்ளப்படாமை.

(iii) நாளாந்த ஓட்ட அட்டவணை குறித்த கால எல்லையின் பிரகாரம் தயாரிக்கப்படாமை

(iv) விபரங்களை உள்ளடக்கிய வாகனம் தொடர்பான பதிவேடொன்று பயன்படுத்தப்படாமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

2017 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

2.2 நிதிக் கூற்றுக்கள் குறித்து கருத்து தெரிவித்தல்

2.2.1 இலங்கை அரச கணக்கீட்டு நியமங்கள்

(அ) இலங்கை அரச கணக்கீட்டு நியமம் 02

காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது திறைசேரியிலிருந்து பெற்ற பணம் மற்றும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டவைகளின் தேறிய விளைவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018ஆம் ஆண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது அத்தகவல்களை வெவ்வேறாகக் குறிப்பதற்கு கவனத்திற் கொள்ளப்பட்டது.

(ஆ) இலங்கை அரச கணக்கீட்டு நியமம் 07

2012ஆம் ஆண்டில் மூலதன ஒதுக்கீடுகளால் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளுக்கு கடன் கழிப்பு செய்யப்பட்டுள்ளதாக விசாரணையில் குறிப்பிட்டுள்ளமை தவறானது என்பதுடன், அக்கடன் கழிப்பு 2012ஆம் ஆண்டில் மூலதன ஒதுக்கீடுகளால் கொள்வனவு செய்யப்பட்ட கட்டடங்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் அறிவிக்கின்றேன்.

2.2.2 கணக்கீட்டுக் குறைப்பாடு

(அ) பணிக்கொடை ஒதுக்கின் போது கடந்த நிதி ஆண்டுகளில் மேற்கொண்டு வந்துள்ளவாறு சேவைக் கால அண்மித்த அரை ஆண்டு வரை கணக்கிடப்பட்டுள்ளதுடன், அதன் காரணமாக கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டுள்ள பணிக்கொடை ஒதுக்கு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணிக்கொடை ஒதுக்கீட்டின் போது சேவைக் காலத்தினைக் கணக்கிடுதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்வதற்கு கவனத்திற் கொள்ளப்பட்டது.

(ஆ) கடந்த வருடத்தில் திசெம்பர் 31ஆந் திகியில் சிசு செரிய, கெமி செரிய, நிசி செறிய செயற்றிட்டங்களுக்கான திரண்ட செலவு 38,299,494 ரூபா குறைவாக ஒதுக்கப்பட்டிருந்தமையால் இச்செலவு மீளாய்வாண்டின் ஏற்பாடுகளினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் அவ்வாறே மீளாய்வாண்டின் போதும் 7,429,132 ரூபா குறைவாக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு உரிய காரணங்களாவன,

1. ஒவ்வொரு வருடத்திலும் நவம்பர், திசெம்பர் மாதங்களில் சிசு செறிய, கெமி செறிய மற்றும் நிசி செறிய செயற்றிட்டங்களில் சேவைகளை வழங்கியமைக்கான தினசரி குறிப்புப் புத்தகப் பதிவு

தேபோஆணைக்குழுவிற்கு (திசெம்பர் மாதம் பாடசாலை விடுமுறை என்பதால் தினசரி குறிப்புப் புத்தகப் பதிவு பாடசாலை அதிகாரிகள், அதிபர்கள் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட முடியாமல் இருப்பதால்) அடுத்த வருடம் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களிலேயே கிடைக்கப் பெறும். தினசரிக் குறிப்புப் புத்தகங்களைப் பூரணப்படுத்தி தேபோஆணைக்குழுவிற்கு அனுப்பிவைப்பதற்கு இரு மாத கால அவகாசம் வழங்கப்படும். அவ்வாறே தினசரிக் குறிப்புப் புத்தகங்கள் தேபோஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றதன் பின்னர் உரிய கணக்கிடுதல் மேற்கொள்ளப்பட்டு பணஞ் செலுத்துவதற்கு இரு மாத காலம் செல்லும். அதனால், ஒக்டோபர், நவம்பர், திசெம்பர் ஆகிய மாதங்களின் தினசரிக் குறிப்புப் புத்தகப் பதிவுகளுக்கான கொடுப்பனவு அடுத்த வருடத்திலேயே மேற்கொள்ளப்படும். இச்செயற்பாடு ஒவ்வொரு வருடமும் ஒரே விதத்தில் நடைபெறும் செயற்பாடாகும்.

2. சிசு செறிய சேவையில் இயங்கும் பேருந்துகள் சிசு செரிய சேவைக்குரிய நிபந்தனைகளை மீறி இயங்குவதாக முறைபாடுகள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் அம்முறைபாடு குறித்து நடமாடும் பரிசோதனைப் பிரிவின் பரிசோதனையினால் குறிப்பிட்டவாறு இயங்குமெனின் மற்றும் ஓட்டுனர் குறிப்பிட்ட படி சேவையினை வழங்கினார் என பாடசாலை அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் மற்றும் குறிப்பிட்ட மாகாண போக்குவரத்து அதிகாரசபை அல்லது இபோச டிப்போவினால் எழுத்து மூல சான்றினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். அவ் எழுத்து மூல சான்றினைப் பெற்றுக் கொள்வதற்கு இரண்டு, மூன்று மாதங்கள் செல்லும் சந்தர்ப்பங்கள் உண்டு. அதனால் அது வரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணம் சில மாதங்களின் பின் விடுவிக்கப்படும்.

3. நடமாடும் பரிசோதனை அதிகாரிகளால் சிசு செரிய பேருந்துகளைப் பரிசோதிக்கும் போது ஈடுபடுத்தப்பட்ட பேருந்து ஓடுவதற்கு பொருத்தமான பௌதிக நிலைமையினைக் கொண்டிராமை, பேருந்தில் பொருத்தமற்ற பொருத்திகள் (கறுப்பு ஸ்ரிக்கர் ஒட்டியிருத்தல், தொலைகாட்சிப் பெட்டி பொருத்தியிருத்தல்) போன்ற விடயங்கள் காணப்படுகின்றமை, பேருந்து முழுமையான தூரத்திற்கு ஓடாமை குறித்து தகவல் கிடைத்தல் போன்ற பல்வேறு குற்றங்கள் இனங்காணப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பேருந்து குறிப்பிட்ட நாளில் தொடர்ச்சியாக ஓடி இருப்பினும் கொடுப்பனவை இடைநிறுத்தி தவறினைச் சரிசெய்து வருமாறு அறிவிக்கப்படும். மேற்படி தவறுகளை சரிசெய்ததன் பின்னர் உதவித்தொகைக் கொடுப்பனவு செலுத்தப்படும். அவ்வாறான காரணங்களால் உதவித் தொகையினைச் செலுத்துதல் மூன்று, நான்கு மாதங்கள் தாமதிக்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதுடன் வருடம் முடிவுற்று அடுத்த வருடத்திற்கு செல்லும் போது இறுதி மாதங்களுக்கான கொடுப்பனவு அடுத்த வருடத்தில் முதல் காலாண்டினுள் செலுத்த வேண்டியேற்படுகின்றது.

   மேற்கூறப்பட்ட விடயங்களை ஓட்டுனர் சரிசெய்து முன்வைப்பாரா? இல்லையா? என்பது குறித்து உறுதியாகக் கூறமுடியமையினால் எதிர்வரும் ஆண்டில் செலுத்த வேண்டிய (திரண்ட)செலவு குறித்து நூற்றுக்கு நூறு சரியான மதிப்பீட்டினை மேற்கொள்ள முடியாததுடன், செலுத்த வேண்டியுள்ள தேபோஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ள தினசரிக் குறிப்புப் புத்தகப் பதிவுகளிலிருந்து எவ்வித மிகை அறவீடுகளையும் அறவிடாது கணக்கிட்டு மதிப்பீடு ஒன்று

மாத்திரம் முன்வைக்கப்படும். அதற்கு முன் வருடத்தின் தினசரிக் குறிப்புப் புத்தகப் பதிவுகளுகள் அடுத்த வருடத்தில் மூன்று மாதங்களின் பின்னர் முன்வைப்பினும் முறைமைகளுக்கு அமைய மிகை அறவீட்டினை அறவிட்டுக் கொடுப்பனவை மேற்கொள்ளவேண்டியுள்ளது. அதனால், திரண்ட செலவு இல்லாவிடின் கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் என்ற வகையில் நூற்று நூறு மதிப்பீடு ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பது கடினமாகும்.

இந்நிலைமையினைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வொன்றாக சிசு செரிய பேருந்துகளில் GPS இயந்திரங்களைப் பொருத்தி GPS அறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் திட்டவரைவொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டிக்கு அறிக்கையொன்றினை முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(இ) விசாரணையில் குறிப்பிட்டுள்ளபடி கட்டடங்களைப் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட முழுத் தொகை செலவாக தொழிற்பாட்டுச் செலவிற்குள் வரவு வைத்திருப்பது தவறுதலால் ஆகும். 2018 நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது மூலதனமாக்கப்பட வேண்டிய அளவினை இனங்கண்டு கணக்கினை சரிசெய்வதற்கு கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) 2017 திசெம்பர் 31ஆந் திகதியில் மீள்கொள்முதல் நடவடிக்கைகளில் (REPO) மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீட்டின் வட்டி இந்த ஒவ்வொரு முதலீடும் இறுதியாக முதிர்ச்சியடையும் நாள் வரை கணக்கில் வைக்கப்பட்டிருந்ததாக தயவுடன் அறிவிக்கின்றேன்.

(உ) ஆணைக்குழு நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது 2012ஆம் ஆண்டு வரை காகிதாதிகள் இருப்பு மீதியை கணக்கில் வைக்கும் போது விசாரணையில் குறிப்பிட்டுள்ள வழிமுறை பின்பற்றியுள்ளது.

2013ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மீண்டும் தயாரிப்பதற்காக பட்டயக் கணக்காளர் நிறுவனத்திற்கு (அமரசேக்கர அன்ட் கம்பனி) கையளிக்கப்பட்டது. அதன் போது காகிதாதிகள் தொகை இருப்பு நிலைக் குறிப்புப் பத்திரத்திலிருந்து அகற்றப்பட்டு காகிதாதிகள் மற்றும் அச்சிடல் செலவு முழுமையாக வருமானக் கூற்றில் வரவு வைக்கப்பட்டதுடன், அந்நாள் முதல் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அக்கொள்கை பின்பற்றப்பட்டது.

(ஊ) மேற்படி (உ) பதில் பொருந்தும்.

2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

(அ) 1971 இல 38 கொண்ட நிதிச் சட்டம்

(i) 2017ஆம் ஆண்டில் 300 மில்லியன் ரூபா பணம் பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறிவிக்கின்றேன்.

(ii) தற்காலிக மேலதிகப் பணத்தினை முதலீடு செய்வதற்கு திறைசேரியின் அனுமதியினைப் பெறுவதற்காக தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உரிய கடிதத்தின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இல ஆர்ரீ/பீ/என்ரீசீ/எவ்ஏ/2012/22 கொண்ட கணக்காய்வு விசாரணைக்கான பதிலுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.)

எவ்வாறெனினும் 2012 ஆகஸ்ட் மாதம் 22ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பிலான பொதுக் கூட்டத்தின் போது, குறுகிய கால மேலதிக நிதியங்கள் ஏழு நாள் கோரல் வைப்புக்களில் முதலீடு செய்வதற்குப் பதிலாக ஒரு பகுதியினை கூடிய வட்டி வருமானத்தைப் பெறுவதற்காக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (பொது முயற்சிகள் தொடர்பிலான பொதுக் கூட்டத்தின் குறிப்புக்களின் பிரதியொன்று இல ஆர்ரீ/பீ/என்ரீசீ/எவ்ஏ/2012/22 கொண்ட கணக்காய்வு விசாரணைக்கான பதிலுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.)

(ஆ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2017ஆம் ஆண்டிற்கு உரிய பொருட்பதிவேட்டுப் பரிசோதனை மேற்கொண்டு ஆய்வறிக்கை ஏற்கனவே கணக்காய்விற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(இ) தற்போது பேணப்படும் நிலையான சொத்துக்கள் ஆவணத்தை, சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான மாற்றங்களைச் செய்து பேணுவற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு கணினி மற்றும் மென்பொருள்கள் தொடர்பில் பிரத்தியேகமான சொத்துக்கள் ஆவணமொன்றைப் பேணுவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

3.2 ஆணைக்குவிற்கு எதிரான அல்லது ஆணைக்குழுவினால் ஆரம்பித்துள்ள சட்டரீதியான சம்பவங்கள்

(i) 19 வழக்குகள் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் விலைமனு கோரல் சம்பந்தமாகவும், 02 வழக்குகள் பதவி உயர்வு சம்பந்தமாகவும் 01 வழக்கு பாதையினை நீடித்தல் சம்பந்தமாகவும் ஆணைக்குழுவிற்கு எதிராக 22 வழக்குகள் உச்ச நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளன.

(ii) அவ்வாறே அனுமதிப்பத்திரங்கள் சம்பந்தமாக 03 வழக்குகளும் பெஸ்ரியன் மாவத்தையில் ஆசனங்களை ஒதுக்குதல் சம்பந்தமாக 01 வழக்கும் கொழும்பு பதுளை பாதைக்கான பொது நேர அட்டவணை வழங்குதல் சம்பந்தமாக 01 வழக்கும் என ஆணைக்குழுவிற்கு எதிராக 05 வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளன.

(iii) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்படும் செல்லுபடியாகும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் இன்றி பேருந்தினை ஓட்டியமைக்கு எதிராக உரிய தரப்பினருக்கு ஆணைக்குழுவினால் நீதவான் நீதிமன்றத்தில் 16 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. தாக்குதல் சம்பவத்திற்கு எதிராக உரிய தரப்பினருக்கு ஆணைக்குழுவினால் நீதவான் நீதிமன்றத்தில் 01 வழக்கு தொடரப்பட்டுள்ளது.

(iv) பேருந்து ஆசனங்களின் நியமம் சம்பந்தமாக 01 வழக்கும், அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக 02 வழக்குகளும் ஆணைக்குழுவிற்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளன.

(v) சேவையினை முடிவுறுத்துதல் சம்பந்தமாக ஆணைக்குழுவிற்கு எதிராக 03 வழக்குகள் ஊழியர் நியாய சபையில் தொடரப்பட்டுள்ளன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

4.1.1. செயற்பாடு மற்றும் மீளாய்வு

(அ) இருக்கும் 03 கெமி செரிய சேவைகளை 06 சேவைகள் வரை மீளாய்வாண்டினுள் அதிகரித்துக் கொள்வதற்கு இயலுமாக இருந்ததுடன், 25 சேவைகள் வரை அதிகரித்துக் கொள்வதற்கு முடியாது போயுள்ளது என அவதானிக்க முடிந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் கெமி செரிய சேவையினை முன்வைக்குமாறு மாகாணப் போக்குவரத்து அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டும் 02 மாகாணப் போக்குவரத்து அதிகார சபைகள் மாத்திரமே (கிழக்கு மற்றும் மத்திய) 6 சேவைகளை முன்வைத்திருந்தன. அந்த 06 பாதைகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு விலைமனு கோரப்பட்டுள்ளதுடன், அவற்றில் இரண்டிற்கு மாத்திரம் விலைமனுதாரர்கள் முன்வந்துள்ளனர். அதன் படி இரண்டு சேவைகளுக்கு மாத்திரம் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிசி செரிய செயற்றிட்டத்தின் கீழ் 123 சேவைகளிலிருந்து 158 சேவைகள் வரை அதிகரித்துக் கொள்வதற்கு திட்டமிடப்படினும் 130 வரை மாத்திரமே அதிகரித்துக் கொண்டுள்ளதுடன் புதிய 28 சேவைகளைத் திட்டமிட்ட படி அதிகரித்துக் கொள்ள முடியாமல் போயுள்ளது என அவதானிக்கப்பட்டுள்ளது. அதற்கு ஏதுவாயுள்ள காரணங்கள் கீழ்வருமாறு

- 2017.03.21ஆந் திகதியிட்ட கடிதம் மூலம் இபோசவினால் நிசி செரிய புதிய சேவைகளுக்காக பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன.
- புதிய சேவைகளுக்கு பரிந்துரை கிடைக்காமையினால் 2017.07.11 ஆந் திகதியில் மீண்டும் நினைவூட்டல்ஒன்று இபோசவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- அந்நினைவூட்டலின் படி பதில் கடிதமும் இருக்கும் சேவைகளும் கூடிய புதிய சேவைகளுக்கான ஆவணம் கிடைத்துள்ளது.
- முன்வைக்கப்பட்டுள்ள ஆவணத்திலிருந்து புதிய சேவைகளைத் தெரிவு செய்து பணிப்பாளர் சபையின் அனுமதிக்கு 2017..09.03ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- 2017.10.16 பணிப்பாளர் சபை அனுமதியின் படி உண்மையிலேயே இயங்குவதாக நடமாடும் பரிசோதனைப் பிரிவினால் பரிசோதித்து உறுதிப்படுத்தப்பட்ட சேவைகள் மாத்திரம் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுவதற்கு பணிப்பாளர் சபை அனுமதி வழங்கியுள்ளது.
- அதன் படி 41 புதிய சேவைகள் நடமாடும் பரிசோதனைப் பிரிவின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றுள் உண்மையிலேயே இயங்குவதாக உறுதிப்படுத்தப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை 25 ஆகும். இயங்காமல் இருக்கும் சேவைகளின் எண்ணிக்கை 16 ஆகும்.
- இயங்கும் சேவைகளாக இனங்காணப்பட்ட 25 சேவைகளுக்காக ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு 2017.11.01ஆந் திகதியில் இலங்கைப் போக்குவரத்துச சபைக்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- அவ்வறிவித்தலின் படி 2017.11.06 நிட்டம்புவை டிப்போ 06 நிசி செரிய சேவைகளுக்கும் கொக்கல டிப்போ 02 சேவைகளுக்கும் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளன.

  அதன் பிரகாரம், குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றி 2017ஆம் ஆண்டிற்கு 08 நிசி செரிய சேவைகளையே ஆரம்பிக்க முடிந்தது. எனினும் ஏற்கனவே இபோசவினால் முன்வைக்கப்பட்டுள்ள 24 சேவைகளுக்கு குறிப்பிட்ட வழிமுறைகளின் கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்டு சேவைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) கிளிநொச்சி பேருந்துத் தரிப்பிடத்தில் ஆரம்பத்தில் முன்மொழியப்பட்ட காணியின் எல்லைகள் மாற்றமடைந்தமையால் ஆரம்பத்தில் 03 மாதங்கள் அளவிலான காலத்திற்கு செயற்றிட்டத்தின் பணிகளை ஆரம்பிக்க முடியாமற் போயுள்ளது.

(ஈ) யாழ்ப்பாண பேருந்துத் தரிப்பிடத்திற்கான உத்தேசிக்கப்பட்ட காணி தெளிவற்றதாக உள்ளது.

(உ)கட்டட இல 03 நவீனமயப்படுத்தலுக்காக ஆரம்பத்தில் அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனத்தினால் முன்வைக்கப்பட்ட மதிப்பீடு அவ்வருடத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தொகையினை விடக் கூடுதலானதாயின் மீண்டும் இரண்டாம் முறை சிற்சில உருப்படிகளைக் குறைத்து விபரக்குறிப்புக்கள் மாற்றப்பட்டு ஒதுக்கப்பட்ட தொகைக்கு பொருந்துமாறு மதிப்பீட்டினைத் தயாரித்ததன் காரணமாக திட்டமிட்ட படி 2017ஆம் ஆண்டில் அப்பணிகளை ஆரம்பிப்பதற்கு முடியாமற் போயுள்ளது.

(ஊ)ஹிங்குரக்கொடை பேருந்துத் தரிப்பிடத்தின் திட்டம் மீண்டும் மாற்றப்பட்டதன் காரணமாக ஒப்பந்த நிறுவனத்திற்கு வேலைத்தளத்தினை 2018 ஆகஸ்ட் 31ஆந் திகதியன்றே ஒப்படைக்க

முடிந்தது. அதன் பிறகு கடைகள் மற்றும் மின்சாரக் கம்பங்களை அகற்றுதல் தாமதமாகியதால் திட்டமிட்ட படி நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு முடியாமற் போயுள்ளது.

2018ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பேருந்துத் தரிப்பிடங்களுக்கான பிரவேசப் பாதைகளை மாற்றுதல் மற்றும் அதற்கு இணங்கலாக அகற்றுகைகள் தாமதமாதல் காரணமாக நிர்மாணப் பணி தாமதமாயினும் நீடிக்கப்பட்ட காலத்தினுள் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்து 2018.08.01ஆந் திகதி இப்பேருந்து நிலையம் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

(எ) உரிய கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு மீளாய்வாண்டான 2017இனுள் ஜீ.பீ.எஸ். செயற்றிட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு 17,570,635 ரூபா கணனிகளைக் கொள்வனவு செய்திருக்கவில்லை என்பதுடன் நிறுவனத்தின் தேவைப்பாட்டின் படி கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதற்காக செலவிடப்பட்ட தொகை 2,609,399 ரூபாவாகும்.

மேலும், விசாரணையில் சுட்டிக்காட்டியுள்ளவாறு ஜீ.பீ.எஸ். பொருத்துதல் எல்லா மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளுக்கும் அமுல்படுத்துப்பட வேண்டியதுடன், உரிய கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட காலத்தில் அதிவேகப் பாதையில் இயங்கும் பேருந்துகளுக்கும் மற்றும் அதி சொகுசு பேருந்துகளுக்கும் சோகுசு பேருந்துகளுக்கும் ஜீ.பீ.எஸ். உபகரணங்களைப் பொருத்துதல் முடிவடைந்திருந்தது.தற்போது அரை சொகுசு மற்றும் சாதாரண சேவை பேருந்துகளுக்கு ஜீ.பீ.எஸ். உபகரணங்களைப் பொருத்தி செயற்படும் நிலைக்கு கொண்டு வர ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

4.2 முகாமைத்தவச் செயற்பாடுகள்

(அ)1991 இல 37 கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 24ஆவது பிரிவின் பிரகாரம் பயணிகள் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு ஆணைக்குழுவிற்கு ஏற்பாடுகள் காணப்படினும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்கும் வழிமுறை குறித்து சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. தே.போ.ஆ. நிறுவப்பட்ட காலத்தில் இருந்து 2008ஆம் ஆண்டு வரை பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் ஒவ்வொரு தனிநபரும் கோரும் அடிப்படையிலேயே வழங்கப்பட்டது. அதன்போது திறந்த மற்றும் வெளிப்படைத்தன்மை இருக்கவில்லை. அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் ஆயுட்காலம் தொடர்பில் எதுவிதக் குறிப்பும் இல்லாதிருந்ததுடன் 3000.00 ரூபா தொகையொன்றினைச் செலுத்தி வருடாந்தம் இற்றைப்படுத்தப்பட்டது.

2005ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்ட இல CP 036/031/1461/05/ கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது விலைமனு முறைமையினைப் பின்பற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டதுடன், அதன் பிரகாரம் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளுமாறு

பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இம்முறைமை ஊடாக முதன்முதலாக 2008ஆம் ஆண்டில் விலைமனு கோரப்பட்டுள்ளது.

அதன் படி தே.போ.ஆ. நிறுவப்பட்ட காலத்தில் இருந்து 2008ஆம் ஆண்டு வரை அதாவது ஏறக்குறைய 15 வருட காலம் முறையான முறைமையொன்று இல்லாது சட்டத்தின் விதிமுறைகளுக்கு மாறாக பயணிகள் சேவை அனுமதிப்பத்திம் வழங்கப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டில் அமைச்சரவையின் அனுமதி பெற்ற விலைமனு முறைமையினாலும் சட்டத்தின் விதிமுறைகளுக்கு மாறாக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தின் காலம் முறையே 5 வருடங்கள் மற்றும் மேலும் 3 வருடங்கள் என 8 வருட காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து விடயம் தொடர்பில் விளக்கத்தினைப் பெற்றதன் பின்னர் 2017ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 21 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் சட்டத்தின் 25ஆவது மற்றும் 30ஆவது விதிமுறைகளுக்கு அமைய 06 வருட காலத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

2018.07.05ஆந் திகதியில் பெற்றுக் கொடுத்த தரவுகளின் படி செல்லுபடியாகும் 3171 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களில் விலைமனு முறைமையின் கீழ் வழங்கப்பட்டு செல்லுபடியாகும் எனக் காணப்படுவது 291 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் ஆகும். அதன் படி செல்லுபடியாகும் நிலையில் காணப்படும் எஞ்சிய 2880 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களும் விலைமனு முறைமை அமுல்படுத்தப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களாவதுடன், அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் காலம் குறித்து எவ்விதக் குறிப்பும் இல்லை. அதனால் அந்த 2880 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களையும் இரத்துச் செய்து மீண்டும் விலைமனு கோரும் போது பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரிமையாளர்களின் எதிர்ப்பு எழக்கூடும்.

தற்போது காணப்படும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் ஏதேனும் திருத்தத்திற்கு உட்படும் சந்தர்ப்பத்தில் (பாதை திருத்தம் மற்றும் உறவுமுறை மீதான உரிமை மாற்றம்) அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் வருடாந்த இற்றைப்படுத்தும் கட்டணம் 3000.00 ரூபா முதல் 15,000.00 ரூபா வரை அதிகரிக்கப்படும்.

அதன் பிரகாரம், தற்போது செல்லுபடியாகும் நிலையில் காணப்படும் 291 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் விலைமனுக் கட்டணம் மற்றும் 3000.00 ரூபா அறவிடலுடனும், 922 அனுமதிப்பத்திரங்கள் 15,000.00 ரூபா அறவிடலுடனும் வருடாந்தம் இற்றைப்படுத்தப்படும். எஞ்சிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களுக்கு அறவிடப்படும் 3000.00 ரூபா தொகையினை அதிகரிப்பது குறித்து தற்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டியில் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், இது குறித்து எதிர்காலத்தில் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து உரிமையாளர்களுடனும் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் அதிவேகப் பாதைக்கான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு 03 சந்தர்ப்பங்களில் விலைமனு கோரப்பட்டதுடன், விலைமனு இல 23 உயர் நீதிமன்ற ஆணையின் படி மற்றும் விலைமனு இல 24 பணிப்பாளர்

சபை தீர்மானத்தின் படி இரத்துச் செய்ய வேண்டியேற்பட்டது. எனினும் விலைமனு இல 25இன் கீழ் 2017ஆம் ஆண்டில் 21 நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்க முடிந்தது. 2017ஆம் ஆண்டில் அதிவேகப் பாதையின் சேவைகளுக்காக நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், 2018ஆம் வருடத்திர் அதிவேகப் பாதைக்கு மற்றும் சாதாரண பாதைகளுக்கும் விலைமனு கோருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் படி விலைமனு இல 26இன் கீழ் 48 அதிவேகப் பாதை அனுமதிப்பத்திரங்களுக்கும் விலைமனு இல 27இன் கீழ் 09 சாதாரண பெருந்தெருக்கள் அனுமதிப்பத்திரங்களுக்கும் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு விலைமனு கோரப்பட்டுள்ளது. இல 26 ஆகிய விலைமனுவிற்கு உள்ள தடை உத்தரவினால் அதனை திறப்பதற்கு முடியாது உள்ளது. விலைமனு இல 27இன் கீழ் கோரப்பட்ட விலைமனு 2018.08.15ஆம் திகதி திறப்பதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும் அதுவும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சின் செயலாளரின் கட்டளைப் படி **தற்காலிகமாக இரண்டு வாரங்களுக்கு பிற்போடப்பட்டுள்ளது.**

(i) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அதிக பயணிகள் கேள்வி உள்ள போது மற்றும் நேர அட்டவணை இடைவெளியின் போதும் தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். பெஸ்ரியன் மாவத்தை பேருந்துத் தரிப்பிடத்திலிருந்து நாளாந்தம் 1800 பேருந்துகள் அளவில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கு ஓடுகின்றன. அவ்வாறு ஓடும் ஏதுமொரு பேருந்து இயங்காத சந்தர்ப்பத்தில் அல்லது விபத்துக்குள்ளான சந்தர்ப்பத்தில் பயணிகள் பயண வசதிக்காக தற்காலிக அனமதிப்பத்திரமொன்று மூலம் வேறொரு பேருந்து ஈடுபடுத்தப்படும். அவ்வாறே வார இறுதி நாட்களில் மற்றும் நீண்ட விடுமுறை உள்ள சந்தரப்பங்களில் கூடிய பயணிகள் கேள்வி உள்ளதுடன், அப்பயணிகள் கேள்விக்கு போதியளவு பேருந்துகளை வழங்குவதற்கு தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் மூலம் பேருந்துகள் ஈடுபடுத்தப்படும். அவ்வாறு வழங்கப்படுவது பயணிகளுக்கு அவசரமாகத் தமது பயண முடிவிடத்திற்கு செல்வதற்கு தேவையான பேருந்துகளை வழங்குவதற்காகும். நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தினைக் கொண்ட பேருந்துகளுக்கு மாத்திரமே தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

பேருந்தொன்றினை இயங்குவதிலிருந்து அகற்றிய பின்னர் அதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தினால் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் உள்ள பேருந்துகளுக்கு தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் (பேருந்து ஓடாத நாட்கள் அளவிற்கு) வழங்கப்படும்.

காலி மற்றும் மாத்தறை பேருந்துத் தரிப்பிடங்களில் பேருந்து இயக்கத் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் தற்காலிக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கைகள் தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும். இந்நடவடிக்கைக்காக போதியளவு அதிகாரிகள் தே.போ.ஆணைக்குழுவிடம்

இல்லாமையால் அந்நடவடிக்கை தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதிவேகப் பாதையில் ஓடும் அநேகமான பேருந்துகள் காலி மற்றும் மாத்தறை பேருந்துத் தரிப்பிடங்களில் இருந்து ஆரம்பிக்கப்படுவதுடன், வார இறுதி மற்றும் நீண்ட விடுமுறை நாட்களில் பெரும் பயணிகள் கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கு மேலதிகமாக பேருந்துகளை ஈடுபடுத்துதல் அல்லது மேலதிக பயணமுறைகளைப் பெற்றுக் கொடுத்தல் மேற்கொள்ளப்படும். அவ்வாறான சந்தரப்பங்களில் தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் மூலம் பேருந்துகள் ஈடுபடுத்தப்படுவதுடன், அது தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும்.

2014ஆம் ஆண்டில் பாதைகள் திருத்தத்தின் மூலம் அதிவேகப் பாதைக்கு வழங்கப்பட்ட 56 பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் 2015ஆம் ஆண்டில் இரத்துச் செய்யப்பட்டு அவ் ஓட்டுனர்களின் பழைய பாதைகளுக்கு இணைக்கப்பட்டுள்ளன. இப்பேருந்துகள் அதிவேகப் பாதையில் ஓடிய காலத்தில் பயணிகள் அச்சேவைகளுக்கு பழக்கப்பட்டிருந்தமையால் பயணிகளின் கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கும் தொடர்ந்தும் அச்சேவையினை மேற்கொள்வதற்கும் தற்காலிக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

மேலும், தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும் பாதைகளுக்கு நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு 03 சந்தர்ப்பங்களில் போது விளம்பரங்களின் மூலம் விலைமனுக்களை கோருவதற்கு நடவடிக்கை எடுப்பினும் அதற்கு எதிராக ஓட்டுனர்களால் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இல 25இன் கீழ் கோரப்பட்ட விலைமனு மூலம் 21 நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு முடிந்துள்ளது.

(ii) மகரகமை, கடவத்தை மற்றும் கடுவளை பேருந்துத் தரிப்பிடங்களில் இருந்து ஆரம்பிக்கும் அதிவேகப் பாதையின் பேருந்துகளை நெறிப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நேரக் காப்பாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்நேரக்காப்பாளர்கள் அதிவேகப் பாதையில் காலி மற்றும் மாத்தறை வரையில் ஓடும் பேருந்துகளை நெறிப்படுத்தும் நடவடிக்கைகளை மாத்திரம் மேற்கொள்கின்றனர். இதற்கு மேலதிகமாக பயணிகள் கேள்வி அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் அல்லது நேர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பேருந்து ஊடாத சந்தர்ப்பத்தில் மாத்திரம் நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களைக் கொண்ட பேருந்துகளுக்கு தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். தற்காலிக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடவடிக்கை நாளாந்தம் நடைபெறும் நடவடிக்கை அல்ல என்பதுடன் தேவைக்கேற்ப மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும். அதனால், அதற்கான நேரக் காப்பாளர்களை விட உயர் வகுப்பில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்தி அவரிடமிருந்து நிறைவேற்றப்படவேண்டிய அளவிற்கு போதுமான காரியமொன்றல்ல என்பதால் உயர் வகுப்பில் இருக்கும்

உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்துவது பயனற்ற செயலாகும் என்பதுடன் அதில் அவ்வாறு ஈடுபடுத்துவதற்கு மேலதிக உத்தியோகத்தர்களும் இல்லை.

மேலும், அப்பேருந்துத் தரிப்பிடத்தில் பொறுப்புள்ள உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்தும் அளவிற்கு போதியளவு இடவசதிகளைப் பெற்றுக் கொள்வதும் சிக்கலாக உள்ளது. அதனால் பயணிகளுக்கு தரமிக்க, துரித பயணிகள் போக்குவரத்துச் சேவை ஒன்றினை வழங்கும் நோக்காகக் கொண்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் பணியிலுள்ள நேரக் காப்பாளர்கள் தற்காலிக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அவர்களுக்கு தமது கடமைப் பட்டியல் மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு அதிக பயணிகள் கேள்வி உள்ள போது நேரக்காப்பாளர்கள் வழங்கும் தற்காலிக அனுமதிப்பத்திரம் குறிப்பிட்ட நாளிற்கு மாத்திரமே செல்லுபடியாகும் என்பதை அறியத் தருகின்றேன்.

(இ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் தென் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 139 தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரப் புத்தகங்கள் குறித்து அவ்வதிகாரச் சபைக்கு மீண்டும் அப்புத்தகங்களுக்கு உரிய பணம் மற்றும் இணைப்பிரதிகளை ஒப்படைக்குமாறு அறிவித்துள்ளதுடன், 2018.08.10ஆந் திகதியாகையில் அதில் 118 தற்காலிக அனுமதிப் பத்திரப் புத்தகங்கள் மற்றும் அதற்குரிய 3,295,125.00 ரூபா பணமும் கிடைக்கப் பெற்றுள்ளன. அதன் படி இதுவரையில் அவ்வதிகாரசபையினால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்படாத ஏனைய தற்காலிக அனுமதிப்பத்திரப் புத்தகங்கள் மற்றும் அதற்குரிய பணத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அறிவிக்கின்றேன்.

(உ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களின் உரிமையினைச் சாட்டுதல் உறவுமுறை மீது மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் படி அப்பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் உறவுமுறை மீது அல்லாது வேறு தரப்பினருக்கு சாட்டுதல் மேற்கொள்ளப்படாததுடன், பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரிமையாளர்களின் குடும்பத்தில் உறவுமுறை மீது மாத்திரம் சாட்டப்படுதல் மேற்கொள்ளப்படும். அதன்போது பயணிகள் சேவை அனுமதிப்பத்திர உரிமையாளர் மரணிக்கும் சந்தர்ப்பத்தில் ஏற்படும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களைச் சாட்டுதலும் அடங்கும்.

(ஊ) அதிவேகப் பாதையின் சுற்று வட்டத்தினூடாக பிரதான நகரங்களுக்கு பேருந்துகளை ஓட்டும் இயலுமை குறித்து மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் 2016ஆம் ஆண்டின் இறுதியில் பெற்றுக் கொடுத்துள்ள வரைவின் இடைக்கால அறிக்கையினைப் பூர்த்தி செய்து இறுதி அறிக்கையினைப் பெற்றுக் கொள்வதற்கு புதிய செயற்றிட்டமொன்று மேற்கொள்வது அவசியம் என மொறட்டுவைப் பல்கலைகக்கழகத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக மேலும் பணம் செலவிட வேண்டி உள்ளமையால் மற்றும் நோக்கம் மாற்றமடைந்து உள்ளமையாலும் தற்போதைய நிலைமையினைத் துணைவேந்தருக்கு அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளின் வன்பிரதிகள் மற்றும் மென்பிரதிகளை தேவையான நடவடிக்கைகளுக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு பெற்றுத் தருமாறு அறிவித்து மொறட்டுவைப் பல்கலைகக்கழகத் துணைவேந்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் 2016ஆம் ஆண்டு முதல் எல்லா பாதைகளுக்கும் ஆய்வு நடவடிக்கைகள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

(எ) வட மாகாணத்தில் பிரதான பேருந்துப் பரிமாற்றல் மத்திய நிலையமாக நிர்மாணிக்கப்பட்ட வவுனியா பேருந்து நிலையம் 2017 ஜனவரி மாதம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் 2017 ஜனவரி 16ஆந் திகதி அதனைப் பேருந்துச் செயற்பாட்டு நடவடிக்கைக்காக திறந்து வைக்கப்பட்டது. புதிய பேருந்துத் தரிப்பிடம் பேருந்துச் செயற்பாட்டு நடவடிக்கைக்காகத் திறந்து வைக்கப்படினும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் வவுனியா நகர மத்தியில் உள்ள வவுனிய நகர சபைக்குச் சொந்தமான பேருந்து நிலையத்திலிருந்து விலகி புதிய பேருந்துத் தரிப்பிடத்திற்கு வருவதற்கு பின்வாங்கின. ஆரம்பத்தில் சில சேவைகள் புதிய பேருந்துத் தரிப்பிடத்திலிருந்து ஆரம்பித்த போதிலும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் புதிய பேருந்துத் தரிப்பிடத்தில் செயற்பாட்டு நடவடிக்கைளிலிருந்து விலகின. அதன் படி தனியார் பிரிவின் பேருந்துகள் வழமையாக வவுனியா நகர மத்தியில் உள்ள பாதையின் இரு மருங்கிலும் நிறுத்தி வைத்து பேருந்துச் சேவைகளை ஆரம்பித்தன.

புதிய பேருந்துத் தரிப்பிடத்தில் பேருந்துச் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தொடர்ந்தும் முயற்சி செய்ததுடன், அதன் விளைவாக வட மாகாண முதலமைச்சரினால் வவுனியா நகர சபைக்குரிய பழைய பேருந்து நிலையத்தினை மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன் படி 2018 ஜனவரி மாதம் முதல் வவுனியா புதிய பேருந்துத் தரிப்பிடத்தில் இருந்து செயற்பாட்டு நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

வெளி நபர்கள் அனுமதியின்றி பேருந்துத் தரிப்பிடத்திற்குள் நுழைந்து தவறான காரியங்களில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்பட்டமையால் அங்குள்ள அலுவலகத்தினை தொடர்ந்தும் செயற்படுத்தவதற்கும் பேருந்துத் தரிப்பிடத்தின் பாதுகாப்பினைத் தொடர்ந்தும் பேணுவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பேருந்துகள் இவ்விடத்திற்குச் சென்று தினசரிக் குறிப்புப் புத்தகத்தில் வரவினைக் குறித்து பயணத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்விடயங்களுக்கு மேலதிகமாக பேருந்துத் தரிப்பிடத்தை உரிய தரத்தில் பேணுவதற்காக உரிய செலவு மேற்கொள்ளப்பட வேண்டியேற்பட்டதுடன், தற்போது பேருந்துத் தரிப்பிடம் செயற்படும் நிலையில் உள்ளது.

4.3 பதவியணியினர் நிர்வாகம்

05 நிறைவேற்று அதிகார மட்டத்திலான பதவிகளாவன 04 போக்குவரத்துப் பொறியியலாளர் பதவிகள் மற்றும் 01 பணிப்பாளர் பதவி (நிதி மற்றும் கொள்வனவு) ஆகும். போக்குவரத்துப் பொறியிலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டு நேர்முகப் பரீட்சை ஒன்று மேற்கொள்ளப்படினும், அதற்காக வருகை தந்த விண்ணப்பதாரிகள் அப்பதவிகளுக்கான சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய சலுகைகள் குறித்து திருப்தியடையாமையால் அப்பதவி வெற்றிடமாக உள்ளது. பணிப்பாளர் (நிதி மற்றும் கொள்வனவு) பதவிக்கான ஆட்சேர்ப்பிற்கு இறுதி நேர்முகப் பரீட்சையும்

மேற்கொள்ளப்பட்டிருப்பதால், விரைவில் அவ்வெற்றிடத்தினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதனால் நிதிசார் அதிகார விநியோகம் தொடர்பில் மற்றும் நிறுவனத்தின் கொள்வனவு நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு தடைகள் ஏற்படமாட்டாது.

6. கணக்களிப்புப் பொறுப்பு மற்றும் நல்லாளுகை

6.1 நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல்

2018ஆம் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களை குறிப்பிட்ட காலவரையறையில் கணக்காய்விற்கு முன்வைப்பதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

6.2 கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயன்முறை

6.2.1 கொள்வனவு

2017ஆம் ஆண்டாகையில் பேருந்துத் தரிப்பிடங்களை நிர்மாணித்தல் ஆகிய மூலதனச் செயற்றிட்டங்களுக்குரிய கொள்வனவு நடவடிக்கைகள் கடந்த ஆண்டில் ஆரம்பித்து தொடர்கின்றமையால் 2017ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டத்தினைத் தயாரிக்கையில் அவ்வாண்டில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட மூலதனச் செயற்றிட்டத்தின் மீதான கொள்வனவு நடவடிக்கைகள் கொள்வனவுத் திட்டத்தினுள் உள்ளடங்காததுடன், "Procurement of total IT solution (internal software)" உருப்படியின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கான ERP செயற்றிட்டத்தினை ஆரம்பிப்பதற்கு உரிய கொள்வனவுப் பணிகளும் 2016ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

மேலும், கொள்வனவுத் திட்டத்தினுள் உள்ளடங்கும் பல கொள்வனவுகள் உரிய வருடத்தினுள் தேவையின் நிமித்தம் கொள்வனவு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட சிறிய பெறுமதியுள்ள கொள்வனவுகள் என்பதுடன், இச்சிறிய பெறுமதி கொண்ட கொள்வனவுகள் சந்தை விலை முறைமையினைப் பின்பற்றி மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்படி விடயங்கள் தொடர்பில் கொள்வனவு வழிகாட்டியில் 4.2.1. மற்றும் 4.2.2. பந்திகளின் பிரகாரம் விபரமான கொள்வனவுத் திட்டம் ஒன்று மற்றும் கொள்வனவு அட்டவணையொன்றைத் தயாரிப்பதற்கு 2017ஆம் ஆண்டில் கடினமாக இருந்ததுடன், எதிர்வரும் முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் கொள்வனவு வழிகாட்டியில் 4.2.1. மற்றும் 4.2.2. பந்திகளின் பிரகாரம் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தயவுடன் அறிவிக்கின்றேன்.

6.2.2 தாமதமாகிய செயற்றிட்டங்கள்

(அ) மெதிரிகிரிய பேருந்து நிலைய கட்டுமான செயற்றிட்டத்தில் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆகுசெலவு 18,908,677.70 ரூபா என்பதுடன், தாமதமாகியதற்கு உச்சளவு தாமதக் கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையம் 2018.08.01ஆந் திகதி மக்கள் மயப்படுத்தப்பட்டது.

(ஆ) கிண்ணியா பேருந்து நிலையம் 2018 யூலை 22ஆந் திகதி மக்கள் மயப்படுத்தப்பட்டது.

இரண்டாவது கட்டத்திற்கு உரியதாகிய அஸ்போல்ட் இடுதல் ஏனைய செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறு அளவானதாயின் இயந்திரோபகரணங்களைப் பெற்றுக் கொள்ள முடியாது போனமை தாமதமாகியதற்கு பிரதானமான காரணியாகியது. விடயம் அவ்வாறு இருப்பினும் ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து உச்சளவு தாமதக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

6.3 <u>வரவுசெலவுப் பேரேட்டுக் கட்டுப்பாடு</u>

எதிர்வரும் ஆண்டில், பாதிடப்பட்ட மற்றும் மெய் வருமானச் செலவினங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளைக் குறைப்பதற்கு கவனஞ் செலுத்துவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

7. <u>முறைமைகளும் கட்டுப்பாடுகளும்</u>

(அ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு

(i) (ii) (iii) (iv) புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குகை தற்போது விலைமனு கோரல் மூலம் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது. புதிய பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது டெண்டரைப் பெறுபவரால் அவ்வனுமதிப் பத்திரத்திற்குரிய பேருந்தொன்றினைக் கொள்வனவு செய்வதற்கு குறித்த கால அவகாசமொன்றைப் பெற்றுக் கொள்வதால் உரிய டெண்டரை ஏற்றுக் கொண்டதன் பின்னர் அதற்குரிய அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு குறித்த அவகாசமொன்று எடுக்கப்படும். அதனால் அனுமதிப்பத்திரதாரருக்கு அதற்கு 02 மாத கால அவகாசம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரத்தினை இற்றைப்படுத்துவதற்கு உரிய ஆவணமொன்று தற்போது பேணப்படுவதுடன், அதனை எதிர்காலத்தில் முறையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் மூலம் பூர்த்தி செய்ய முடியாத பயணிகள் கேள்வி ஏற்படும் போது அப்பயணிகள் கேள்விக்கு ஏற்றவாறு பேருந்துகளை ஈடுபடுத்துவதற்கு நாளாந்தம் செல்லுபடியாகும் வகையில் தற்காலிக அனுமதிப்பத்திங்கள் வழங்கப்படும். அதனால் பயணிகளுக்கு தரமிக்க பயணிகள் சேவையினை வழங்குவதற்கு தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது அவசியமாகும் என்பதுடன், அவ்வாறு தற்காலிக பயணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களை ஏற்கனவே நிரந்தர பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தினைக் கொண்ட பேருந்துகளுக்கு மாத்திரமே வழங்கப்படும்.

(v) (vi) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வெளித்தரப்பினருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளும் போது இது வரை காலமும் மேற்கொள்ளப்பட்டு வந்த வழிமுறைப்படி காசோலைகளை ஒப்படைப்பதற்கான ஆவணமொன்றை பயன்படுத்தியது. எனினும் எதிர்வரும் கொடுப்பனவுகளின்

போது விசாரணையில் குறிப்பிட்டுள்ள வழிமுறையினைப் பின்பற்றுவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) கொள்வனவு நடவடிக்கைகள்

கொள்வனவுத் திட்டம் மற்றும் கொள்வனவு அட்டவணையினைத் தயாரிப்பதற்கும் மற்றும் கொள்வனவு நடவடிக்கைகளின் போதும் சரியான முறையில் செயற்படுவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

(இ) பதவியணியினர் நிர்வாகம்

வெற்றிடமாகிய பதவிகளுக்கு காலத்திற்கு காலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு பொருத்தமானவர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) நிதிக் கட்டுப்பாடு

பற்றுச்சீட்டுக்களிலிருந்து அதிக முற்பணத்தினை குறைத்தல் மற்றும் இறுதிப் பற்றுச்சீட்டினை உறுதிப்படுத்தல் தாமதமாதலும் பணம் மீதமாவதற்கு காரணமாகும். அப்பணம் அச்செயற்றிட்டங்களுக்காக 2018ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டி உள்ளது.

(உ) வாகனக் கட்டுப்பாடு

(i) (ii) (iii) (iv)

2017ஆம் ஆண்டில் இபோச உத்தியோகபூர்வ வாகனப் பொறியிலாளரின் பரிசோதனையின் கீழ் எரிபொருள் பாவனைப் பரிசோதனையினை மேற்கொண்டு, நாளாந்தம் ஓட்டக் குறிப்புக்களில் எரிபொருள் சமப்படுத்தல் மேற்கொள்ளப்படும். 2018ஆம் ஆண்டிலும், இபோச உத்தியோகபூர்வ வாகனப் பொறியிலாளரின் பரிசோதனையின் கீழ் ஒவ்வொரு வானத்திற்கும் எரிபொருள் பாவனையினைப் பரிசோதிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், எல்லா வாகனங்களினதும் எரிபொருள் சமப்படுத்துதலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நடமாடும் பரிசோதனை, ஆய்வு நடவடிக்கைகள் போன்ற உத்தியோகபூர்வ பணிகளுக்காக தொடர்ச்சியாக நாள் கணக்கில் உத்தியோகபூர்வ பணிகளுக்கு வாகனங்களை ஈடுபடுத்த வேண்டி இருப்பதால், நாளாந்த ஓட்டக் குறிப்புக்களைப் பரிசோதிப்பதற்காக, ஓட்டக் குறிப்புப் புத்தகங்களை நாளாந்தம் அலுவலகத்திற்கு பெற்றுக் கொடுப்பது சில சந்தர்ப்பங்களில் கடினமாக உள்ளது. எனினும், மேற்படி விடயங்களைத் தவிர்த்து இதன் பின்னர் உரிய முறையில் மாதாந்த சாராம்சத்தைக் குறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனங்கள் குறித்து வாகன வகை, வடிவமைப்பு, பதிவு இலக்கம், ஒப்படைத்த திகதி, தம்மால் சாட்டப்பட்ட திகதி உள்ளடங்கிய தகவல்கள் கணினியில் உட்புகுத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் ஆவணமொன்றையும் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொறியியலாளர் எம்.ஏ.பி. ஹேமச்சந்திர

தலைவர்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு